

# தேனோலை

பதிப்பாசிரியர்:
கொடுமுடி சண்முகப் பிரகதம்



முதல் இதழ்
1974 ஜூலை

# [illegible]

பழங்கலைக் காலாண்டிதழ்

இதழ் ஒன்று — ஜூன் 1974

1. மதுக்கரைப் பட்டயம்

2. இருபத்தி நாலு நாட்டுப் பட்டயம்

விலை ரூ. 1-00

ஆண்டுக் கட்டணம் ரூ. 4-00

மூன்றாண்டுக் கட்டணம் ரூ. 10-00

ஆயுட் கட்டணம் ரூ. 100-00

பதிப்பாசிரியர்

கொடுமுடி சண்முகம் பிரசுரம்

86, இந்திரா நகர்,

சென்னை-600020.

கொங்கு

அரசியல் வரலாற்றுத் திங்களிதழ்

ஆண்டுக் கட்டணம் ரூ. 3-50

தேனோசை

பழந்தமிழ்க் காலாண்டிதழ்

ஆண்டுக் கட்டணம் ரூ. 4-00

கொங்கு வெளியீடுகள்

ஆய்வுத் தேன் ரூ. 4-00

மதுக்கரைப் பட்டயம் ரூ. 3-00

ஆசிரியரும், வெளியிடுபவரும் :

கொடுமுடி சண்முகப் பிரகாசம்

86, இந்திரா நகர்,

சென்னை-600020.

அச்சிட்டோர் :

காசு. சுப்பையன்

நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்,

சென்னை-600 014

# மதுக்கரைப் பட்டயம்

# மதுக்கரைப் பட்டயம்

சுபமஸ்து ஸ்வஸ்திஸ்ரீ[1] விஜயாப்யுதய [2]கலியுக சகாப்தம் 4360 மேல் [3]சாலிவாகன சகாப்தம் 1307 விஜய ஸ்ரீ மார்கழி 27ந்தேதி கேட்டையும் பூர்வ பக்ஷ தீதியும் திருவோண நட்சத்திரமும் சுபயோக வேளையும் பாலவ காரணமும் சுப லக்கினமும் பெற்ற சுபதினத்தில் இந்த சாசனம் பெறுகிறது.[4]

கலியுகம் ஆதியில் பிறந்தவை பாரதத்தில் பூர்வத்தில் வம்சத்திலேயாகிய பரீக்ஷித்து மகாராஜா, ஜெனமேஜெய ராஜன், நரேந்திர விக்கிரமாதித்தன், போஜராஜன், சோழ ராஜன், சேர ராஜன், பாண்டிய ராஜன், அச்சுததேவராயர், பிரதாப ருத்திரராயர், நரசிம்ம ராயர், கிருஷ்ணதேவ ராயர் அரிஹர ராயர்[5],

மாமண்டலாதிபதி பெருமாள் ராயர் காரியத்துக்கு கர்த்தாவாகிய சேர ராஜன், சோழராஜன், பாண்டிய ராஜன் திருமலைநாயக்கர், வெங்கிடபதி நாயக்கர், கிருஷ்ணப்ப நாயக்கர் இவர்கள் எல்லோரும் கூடி மூன்று ராசாக்களுக்கும் பொதுவே பிரிச்சது மதுக்கரையில்.[6]

---

1. ஸ்வஸ்தி ஸ்ரீ
2. கலியுக சகாப்தம் 4360 (கி. பி. 1259)
3. சாலிவாகன சகாப்தம் 1307 (கி. பி. 1385)
4. இதில் கூறப்பட்ட கலியுக ஆண்டும், சாலிவாகன ஆண்டும் ஒத்துவரவில்லை. எனவே பட்டயத்தின் காலம் ஐயத்திற்குரியதே.
5. அரச பரம்பரை வரலாற்றின் அடிப்படையில் இல்லை. பரீக்ஷித்து, ஜெனமேஜெயன் இருவரும் மகாபாரதத்தில் கூறப்படுபவர். விக்கிரமாதித்தன், போஜராஜன் இருவரும் வடக்கத்திய மன்னர்கள். கதைகள் மூலம் தமிழகத்தில் பிரபலமானவர்கள். இராயர் வகையினர் விஜயநகர மன்னர்கள். நாயக்கர்கள் அதற்குப் பின் மதுரை, திருச்சியில் இருந்தவர்கள். சேரன், சோழன், பாண்டியன் எல்லோரும் தத்தம் நிலை இழந்துவிட்டனர். இந்தப் பட்டயம் ஆங்கிலேயர் வருகைக்கு முன் சுமார் 300 ஆண்டுகட்கு முன் எழுதப்பட்டிருக்கலாம்.
6. பல நூறு ஆண்டுகட்கு முன்னர் நடந்த செய்தி கூறப்படுகிறது.

மதுக்கரைக்கும் மேற்கு, மயிலாளத்துக்கும் கிழக்கு, பாலமலைக்கும் தெற்கு, பழனிமலைக்கும் வடக்கு உட்பட மேற்குலச் சீமையென்றும்[1] வெண்பா-வடக்குப் பெரும்பாலை, வைகாவூருக்குத் தெற்கு குடக்கு பொருப்பு வெள்ளிக் குன்று, கிடக்குங் களித்தண்டலை மேவுங் காவேரி சூழ்நாட்டு குளித் தண்டலை யளவென்பது கொங்கு[2] என்று வெண்பா விளக்கும் கொங்கு 24 நாடு நாடு என்றும் பெருங் கொங்கு

தென்திசைக் குடியானவர்களும் மதுக்கரைக்கு அப்பால் கொண்டு வந்து கொங்கு வேளாளர்தென்றும் சேர குலமும் குலமும் பேறு கொடுத்து நாடு பிரித்து

தென்கரைநாடு வேணாவுடையார் கவுண்டர், காங்கயநாடு காங்கய மன்றாடியார், பல்லவராய கவுண்டர் சக்கரைக் கவுண்டர், பூந்துறைநாடு வாரணவாசி கவுண்டர், அரையநாடு தீத்தாக் கவுண்டர், மணநாடு காளியப்ப கவுண்டர், வெங்கலநாடு காளத்தியப்ப கவுண்டர், நீலப்ப கவுண்டர், தட்டையநாடு குமிலன கவுண்டர், கிழங்குநாடு செம்ப கவுண்டர், தலையநாடு பெரியாக் கவுண்டர், வல்லிய கவுண்டர், அண்டநாடு பெரிய தம்பிக் கவுண்டர், வையாபுரிநாடு மங்கலக் கவுண்டர், பழனிக் கவுண்டர், நல்லுருக்க நாடு, மயிலாண்டி கவுண்டர் ஆனைமலைநாடு,

---

1. இது கொங்கு நாட்டின் எல்லைகள்.
2. வடக்கு தலைமலையாம் வைகாவூர் தெற்கு
   குடக்குவெள் ளிப்பொருப்புக் குன்று—கிழக்கு
   கழித்தண் டலைசூழும் காவிரிசூழ் நாடா
   குழித்தண் டலையளவுக் கொங்கு (தனிப்பாடல்).

   இதுவே வெண்பாவின் அசல் வடிவம். இந்த வெண்பா மாறும் பாடு, நூல் எழுதியவரின் புலமைக்கு எடுத்துக்காட்டு!

   வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்கு
   குடக்குப் பொருப்பு வெள்ளிக் குன்று—கிடக்கும்
   களித்தண் டலைமேவு காவிரிசூழ் நாட்டுக்
   குளித்தண் டலையளவு கொங்கு

   (கொங்கு மண்டல சதகப் பதிப்பு)
3. கொங்கு நாட்டின் ஒரு எல்லையாக மதுக்கரை கூறப் பட்டது. கொங்கு மண்டல சதகத்திலுள்ள பாடல் இது.

   மதிற்கரை கீட்டிசை தெற்கு பழனி மதிகுடக்குக்
   கதித்துள வெள்ளி மலைபெரும் பாலை கனிவடக்கு
   விதித்துள நான் கெல்லை சூழ வளமுற்று மேவியிருக்கும்
   பதித்திட வாழ்வு தழைத்திடு நீள் கொங்கு மண்டலமே.

காளிக்கருப கவுண்டர், செப்பண கவுண்டர், பொன் குலிக்கநாடு தெய்வசிகாமணிக் கவுண்டர், நரையனூர்நாடு நஞ்சைய கவுண்டர், வாரக்கநாடு பொன்னப்ப கவுண்டர், ஒடுவங்கநாடு வேலுமணிக் கவுண்டர், காஞ்சிக் கோவில் நாடு காளிக்கவுண்டர், பருத்திப் பள்ளிநாடு பழனியப்பக் கவுண்டர் குருப்பநாடு குசியண கவுண்டர், பூவாணிநாடு, குமரவேலுக் கவுண்டர், ராசிபுரநாடு நல்லதம்பிக் கவுண்டர், வடகரைநாடு சின்னதம்பி கவுண்டர், வாழவந்திநாடு செம்பாக் கவுண்டர் இப்படி இருபத்திநாலு நாடும் வெல்லிமை பிரித்து

வித்தப்படி சரி இருபத்திநாலு நாட்டு கவுண்டருக்கும் கட்டுக்கல்லை யும், அிப்பித்துக் குடுத்து அவர்களுக்கு பிசைப்புங் குடுத்து அவர்கள் பெத்தப் பிறகாறும் குடியான பேர்களும், நாட்டுக் கவுண்டர்களும் பெத்தப்படி தவிறாமல் நடத்திக் கொள்ளுகிறதென்று தொளிலாளிகள் அனைவோருஞ் சொன்னார்கள். 24 நாட்டு கவுண்டர்களும் உங்களுக்கு சீவனத்துக்கும் நடத்திக் குடுக்கிறோ மென்றும் நம்பிக்கை சொல்லிக் குடுத்தார்கள்.

அப்படியிருக்கிறபோது 24 நாட்டுக் கவுண்டர்களும், தம்மளுக்கு[1] நயபாண்டம் வேணுமென்கிறதாக யோசனை செய்து 24 நாட்டுக் கவுண்டர்களும் நாட்டுக் கொருத்தர் "பாண்டியத் தேசத்துக்கும் போய்[2] வெள்க்கோயரை அழைத்து

நீங்கள் எங்கட கொங்கு நாட்டுக்கு குடிபோறவேணுமென்கிறதாக 24 நாட்டுக் கவுண்டர்களும் கேக்க அதுக்கு வெள்க் கோயர்

நாங்கள் இவ்விடத்தில் அண்ணன் தம்பி மாமன் மைத்துனன் இவர்களெல்லோரையும் விட்டு நாங்கள் எப்படி உங்கள் நாட்டுக்கு குடிவாறது என்று வெள்க்கோயர் சொல்ல அதுக்கு 24 நாட்டு கவுண்டர்கள் சொன்னது

பெண்களுக் குண்டானபடி தவிறாமல் காளியாட்சி சாதனப் பட்டயம் எழும் வரும் காளிபூரி மன்னுமடை பொங்களுக் குண்டானபடி தவிறாமல் காளியாட்சி சாதனப் பட்டயம் பெறுதிக் குடுக்கிறோமென்றும் மதுக்கரை செல்

---

1. நயபாண்டம் புதுமையாக்கிய மண் ஏனங்கள்.
2. செவிவழிச் செய்தி "சோழநாடு" சென்று அழைத்து வந்த தாகும். சோழன் பூர்வ பட்டயத்தோடு ஒப்பிடலாம்.
3. வேட்கோவர்

வாண்டியம்மன் முன்பாக நம்பிக்கைப் பிரமாணமுஞ் சொல்லிக் குடுக்குறோம் என்றும்

அரிந்துக் கொண்டு வந்து 24 நாட்டுக்கு 24 பேரை அரிந்துக் கொண்டு வந்து அப்போது கொங்குத் [1]திருநீலகண்டரென்று பேரும் கொடுத்தார்கள்

பெண்ணுக்கு உடைமைதாக வேணுமென்று கேள்க்கும் போது கொங்கு வேளாளரும் கொங்குத் திருநீலகண்டரும் 24 நாட்டு கவுண்டர்களும் உடன்மைதிபோல சரியென்று சொன்னார்கள்.

உடன்மை யென்கிறது யென்னவென்றால் 24 நாட்டு கவுண்டர்களும் கலியாணத்துக்கு பெண்கள் சீருபாதி செய்து கொள்ளும்போது [2]பாதிசீர் பெண்ணைகொள்ளும் குப்பாரி கொட்டி வாரதும், காலோதிரம் போடுறதும், நாட்டுக்கல்லுக்கு பெண் எடுத்துக் கொண்டு போயிவாரதும், மாப்பிள்ளை குதிரை யேரி, பெருந்தாலி கட்டுறது, காளிமுகம்பாரது பெண் அரைக்கிறதும் இந்த ஆறுவகை சீரும் செய்து கொள்ளும் கொங்கோன்னும் 24 நாட்டுக் கவுண்டர்களும் சொன்னார்கள், யிதுவுஞ்சரி யென்று உங்கள் சாதியில் நடக்குறது சீரெல்லாம் செய்து கொள்ளுங்கள் அப்பால் திண்ணமையான காரியத்துக்கு கொங்கு வேளாளர் சீருஞ் செய்து கொள்ளுங்கள் யிதுவும் நீங்கள் வகுத்வொருவர் குடியிருக்குற படியினாலே,

---

1. திருநீலகண்டர் 63 சைவ நாயன்மார்களுள் முதன்மையானவர். திருவாரூரில் வாழ்ந்தவர். திருத்தொண்டத் தொகையில் பெயர் குறித்த வரிசையில் முதலாமவர்.

   தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்.
   திருநீலகண்டத்துக் குயவனார்க்கும் அடியேன்.

   —திருத்தொண்டத் தொகை.

   பெரிய புராணத்தில் இவர் வரலாறு விரிவாகச் சொல்லப் படுகிறது.

2. கொங்கு வேளாளருக்குரிய சீர்களைகளில் இந்த ஆறும் மிகவும் முக்கியமானவை. கொங்கோலர் தமது சீர்செய்து கொள்வதோடு வேளாளரின் சீர்களையும் செய்து கொள்ள அனுமதித்தனர். இப்போதும் அவை நடைபெற்று வருகின்றன.

**சொன்னீ கோடி பிறவருக்கும் நன்மை ஒன்று, உப்புறுவது இப்புறுவதும் பிறவருக்கும் ஒன்று, சொன்றுவது குடுக்கிறது பிரதியம்*

அந்தப் பிரகாரம் 24 நாட்டுக் கவுண்டர்களும் உடந்தையென்றுஞ் சம்மதி சொல்லிப் மறுக்காமல் மெச்சிக்கொண்டுப்பங்கள் முன்பாக நின்று வலக்கை வார்த்தை சொல்லி ஒருத்தார்கள்

*அப்பால் பெண்களுக்குச் சேவகத்துக்கு யென்ன விடறுமென்று* கொங்குத் திருநீலகண்டர் கேள்க்க அதுக்கு 24 நாட்டு கவுண்டர்களும்

உங்களுக்குக் கட்டுக் கருதும், கொப்போருக், முரிக்கருதும், பதிக்கைக் கருதும், தொப்புக்கு வீட்டுக்கு ரெண்டுபடி நெல்லும், அவிஞர் கோயில் கல்யாணச் சோலில், மண்ணத்துப் பொங்கல், பட்டணப்பிரி, விருமசாந்தி, முத்தாலம்மன் விழுமெல்லாம் நீங்கள் பூசை செய்து செல்லவீ

உங்களுக்குச் சொல் வைத்திரம்,
கூலிபெறுக்கு நாலு வள்ளம்

இதுவெல்லாம் திருதி செய்து கொடுத்து உங்களையும் ஆதரவு பண்ணிக்கொள்ளுகிறோம் யென்று 24 நாட்டுக் கவுண்டர்களுஞ் சொல்லி கொண்டு வேளாளருக்கும் கொங்குத் திருநீலகண்டரென்றும் பேருக்கொடுத்து கொண்டு சிறுபத்திறனும் நாட்டுக்கும் அந்தந்த நாட்டாரை அந்தந்த நாட்டுக் கவுண்டர்கள் அழைத்துக்கொண்டு போகவும், கொங்குத் திருநீலகண்டரை

*நீங்கள் பெண்கள் கல்யாணத்துக்கு யென்ன குடுக்கிறது* யென்றும் 24 நாட்டுக் கவுண்டர்கள் கேள்க்க அதுக்கு கொங்குத் திருநீலகண்டர்

*நீங்கள் யெந்தப்பிறகாரம் சொன்னீர்களோ அந்தப் பிறகாரம் கேள்க்குறோ மென்றுரு சொன்னார்கள்.*

எங்கள் கல்யாணத்துக்கு ஒரு பணத்து சிறப்பு வைத்தால்

---

1. வேட்கோவர் நமக்கு எவ்வள விதத்திலும் சமம் என்ற உரிமையை வழங்கி இறந்து போகும் சொல்லி, கோடி இருவருக்கும் ஒன்று என்றும், உணவிலும் சமத்துவம் என்றும் உரிமை வழங்கினர். ஆனாலும் திருமண உறவு மட்டும் இல்லை.

| | |
|---|---|
| வடை | 4 |
| பருப்புத்தாளி | 2 |
| தண்ணீர்ச்சாறு × | 1 |
| பெரியசாறு | 1 |
| தண்ணீர்குடம் | 4 |
| தாளி | 4 |
| (கறா) கரிச்சட்டி | 4 |
| உரிச்சட்டி | 6 |
| தெளிக்கலயம் | 2 |
| பெரிய தட்டச்சட்டி | 1 |
| தண்ணீர்க் கலயம் | 4 |
| ஆக உருப்படி | 33 |

இந்தப் பிரகாரம் நீங்கள் கொடுக்கிறது. இதுக்கு நாங்கள் கொடுக்கிறது வெள்ளை வெள்ளன் ஒரு பணத்துச் சிறப்புக்கு சென்று வள்ள அரிசி முருங்கைப் பருப்பு, பெட்டு வட்டுக் கருப்பட்டி, தெளிப்படிக் பணம் ஒன்றும் இந்த பிரகாரம் நாங்கள் கொடுக்கிறது இதுக்கு ஒரு பணமும் பாக்கு வெத்திலையும் குடுத்தால், சன்னறுப்பு சாத்தி, வாசலிலே கொண்டுபோய் வைக்கவும், இல்லாதிருந்தால் வாசலில் கொண்டுவந்து வைக்குறதில்லையென்று சொல்லிப்போடவும்.

இந்தச் சிறப்பு ஒரு பணம் முதல் 5 பணம் வரைக்கும் வாசலில் சிறுக்கு

| | |
|---|---|
| வடை | 20 |
| பருப்புத்தாளி | 10 |
| தண்ணீர் சாறு | 5 |
| பெருசாறு | 5 |
| தண்ணீர் குடம் | 20 |
| [1] கறைச்சட்டி | 20 |
| உறிச்சட்டி | 30 |
| தெளிக்கலயம் | 10 |
| பெரிய தட்டைடச்சட்டி | 5 |
| தண்ணீர் கலயம் | 20 |
| ஆக உருப்படி | 165 |

இந்த வேறைக்கு நீங்கள் வச்சிருக்கிற பாளுக்கு நாங்கள் குடுக்கிறது சிறு எண்ணமென்றும்

1. இங்கே தாளி 20 விடுபட்டுள்ளது. அதைச் சேர்த்தால் மொத்த எண்ணிக்கை 165 ஆகும்.

அரிசி வள்ளம் 10
பருப்பு வள்ளம் 5
கருப்பட்டி வட்டு 30
நெய்படி 2
பணம் 5

இந்த செல்வனி வைத்திரம் பெண்ணை கலியாண வாசலில் குறித்து அனுப்புகிறதும்,

மடைக்கலப்பானை வைத்து கலியாணம் பண்ணிறுல் மாப்பிளைக்கு

மடைக்கலப் பானை 5
ஆயிரப் பெருந்தாளி 1
கறகம் 1

இதுக்கு அரிசி படி 5
பருப்பு படி 3
கருப்பட்டி வட்டு 3

பெண்வீட்டுக்கு மடைக்கலப்பானை 3
ஆயிரம் பெருந்தாளி 1
கறகம் 1

இதுக்கு வைத்திரம் அரிசி படி 3
பருப்பு படி 1
கருப்பட்டி வட்டு 3

இந்தப் பிறைாம் [1] வரிசைய குறிக்கிறது.

படைபட்டவர் சதிபிக்கலியாணம் செய்தால் ஆதின அறசாணி வைபித்தித யாறும்

ஆனிலக்கி பணம் 5
அறசாணி சாது 1
கறகம் 1
[2] வாழைப் பூ 1
கறக் குடம் 1
சின்னப்பானை 1

---

1. கடல்விடையாது வைகேக் கொழுக்கவேண்டும்.
2. வாழைப் பூ வடிவில் உள்ள மேல் கூடு.

இது " எழுதி வைத்தான் " சாத்திரப்படிக்கு

| | |
|---|---|
| அரிசி வள்ள | 1 |
| பாக்கு படி | 1 |
| வெற்றிலை கவளி | 1 |
| பழம் | 10 |
| தேங்காய் | 1 |
| வெள்ளை அச்சு | 1 |

இதுவெல்லாம் வாசலுக்கு கொண்டு வந்து முன்னே வைத்தால் கண்திறந்து கலியாண வாசலுக்கு கொண்டுபோய் வைக்கவும். இதுக்கு பணம்

| | |
|---|---|
| பொங்கல்பானை உருப்படி | 5 |
| இருக்கும் படி அரிசி வள்ளம் | 1 |
| பருப்பு படி | 1 |

கம்மாற வருக ஜூபக்கள் கலியாணத்துக்கு

| | |
|---|---|
| வெறுத்தும் பானை | 12 |
| சடக்கு | 12 |
| தண்ணீர்க்குடம் | 5 |
| வாழைப் பூ | 5 |
| தீபகெப்பம் | 5 |
| விளக்கு | 5 |
| *ஆக உருப்படி | 45 |

| | | |
|---|---|---|
| இதுக்கு வைத்திரம் | அரிசி வள்ளம் | 1 |
| | பருப்பு (படி) | 5 |
| | பாக்கு | 10 |
| | வெற்றிலை | 25 |
| | பழம் | 10 |

---

1. ஆனை, மற்றும் பாண்டங்களுக்கு, சுண்ணாம்பு பூசி அதன் மீது வண்ணம் தீட்டுதல்.
2. கண்திறத்தல்: ஆனைக்கு எல்லா வண்ணமும் பூசியிருந்தாலும், கண்ணின் கருவிழி தீட்டியிருக்க மாட்டார்கள். சீர வெல்லாம் வந்ததும் அவற்றை முன்னால் வைத்து பூசை செய்யும் முன்பாக கண்ணின் கருவிழி தீட்டுவர். இதுவே கண்திறத்தல் ஆகும்.
3. இதில் ஒரு உருப்படி குறைகிறது. என்னவென்று தெரிய வில்லை.

தேங்காய் 1

இருக்கு பணம் 2

* சூரிய குல வம்சத்துக்கு கலியாணத்துக்கு எடுத்துப்பாரி

பெரிய பாரி 4
சின்னப்பாரி 4
பெரிய மிடா 4
குடம் 4
புள்ளபாரி 4
கரகம் 4
வாழைப் பூ 4
அரசாணிச் சாறு 4
குடம் 1
கரகம் 1
பொங்கப்பாரி உருப்படி 5
தீபகம்பம் 12
பாலிகை 7
* ஆக உருப்படி 33

விருக்கு அரிசி வள்ளம் 1
பருப்பு படி 1
பாக்கு 10
வெத்திலை 20
பழம் 10
தேங்காய் 1
விருக்கு பணம் 8

வில்லவராத் தாரர்களுக்கு கலியாணத்துக்கு எடுத்துப்பாரி

சாருக்குடம் 1
சின்னப்பாரி 1
கரகம் 1
குடம் 1
வாழைப் பூ 1
மடக்கு 1

---

1. சூரியகுல வம்சம் என்பது எந்தச்சாதி என்று தெரிய வில்லை.
2. இதில் 8 உருப்படி அதிகமாக உள்ளது. அரசாணிச்சாறு 1 ஆக இருக்கலாம்.

| | |
|---|---|
| பாலிகை | 7 |
| நாகவல்லிக் கலசம் | 9 |
| பொங்கப்பானை உருப்படி | 5 |
| ஆக உருப்படி | 27 |

பொருத்தி வைத்துக்கொண்டு வீதிக்கு ஆசாரிகள் கொண்டு வரது பெண்ண வீட்டில்

| | |
|---|---|
| அரிசி வள்ளம் | 1 |
| பருப்பு வள்ளம் | 1 |
| பாக்கு | 10 |
| வெற்றிலை | 20 |
| பழம் | 10 |
| தேங்காய் | 1 |

இதுவெல்லாம் வாசலுக்கு கொண்டு வந்து பொருத்துப்பானை முன்னே வைத்ததாலும் பூசை பண்ணி விஸ்வகுலத்தாசாரிகள் அவர்கள் வீட்டுக்கு மேள வாத்தியத்துடன் பொருத்துக் கொண்டு போகவும் [1] பணம் 3

சோழிய வேளாளர் கலியாணத்துக்கு

| | |
|---|---|
| சாறு | 1 |
| கரகம் | 1 |
| வாழைப் பூ | 1 |
| கரகுடம் | 1 |
| மேல் மூடி | 1 |
| மடக்கு | 1 |
| பாலிகை | 7 |
| பொங்கப் பானை உருப்படி | 5 |
| மஞ்சள் நீர்ப்பானை | 1 |
| கலசம் | 1 |
| பல்(க)லிய கூழப்பானை | 1 |

---

1. கவுண்டர்கள் வீட்டு கலியாண வாசலில் வெட்டுகோல் பாலிகைகளைக் கொண்டு போய் வைத்து சீர் பெற்று வர வேண்டும். விஸ்வகுலத்தாசாரிகள் வெட்டுகோல் வீட்டு வாசலில் வந்து பூசை செய்தபின் மேளதாளத்துடன் எடுத்துச் செல்லவேண்டும்.

| | |
|---|---|
| சட்டி | 1 |
| [1] ஆக உருப்படி | 21 |

இதுக்கு

| | |
|---|---|
| அரிசி (படி) | 1 |
| பருப்பு (படி) | 10 |
| பாக்கு | 10 |
| வெற்றிலை | 20 |
| பழம் | 10 |
| தேங்காய் | 1 |

இதுவெல்லாம் வைத்துப் பூசை பண்ணி எடுத்துக்கொண்டு போகவும். இதுக்கு பணம் 2.

பாண்டிய வேளாளர் கலியாணத்துக்கு

| | |
|---|---|
| பெருந்துச்சாது | 1 |
| கரகம் | 1 |
| வாழைப் பூ | 1 |
| கரகக் குடம் | 1 |
| மடக்கு | 1 |
| பாவிகை | 7 |
| பொங்கல்பானை உருப்படி | 5 |
| மஞ்சள் நீர்ப்பானை | 1 |
| கலசம் | 1 |
| மங்கிலியக் கூனைப்பானை | 1 |
| சட்டி | 1 |
| ஆக உருப்படி | 22 |

இதுக்கு

| | |
|---|---|
| அரிசி (படி) | 1 |
| பருப்பு (படி) | ½ |
| பாக்கு | 10 |
| வெற்றிலை | 20 |
| பழம் | 10 |
| தேங்காய் | 1 |

இதுவெல்லாம் முன்பே வைத்துப் பூசை பண்ணி எடுத்துக் கொண்டு போகவும். இதுக்கு பணம் 2.

---

1. இதில் ஒரு உருப்படி அதிகமாகவே உள்ளது. கரகம் இரண்டு முறை கூறப்பட்டுள்ளது.

குருக்களுக்கு[1] கலியாணத்துக்கு

| | |
|---|---|
| பெருந்துப்பாவை | 5 |
| வாழைப் பூவு | 6 |
| குடம் | 2 |
| பெருந்து மிடா | 2 |
| படக்கு | 6 |
| தீபகம்பம் | 7 |
| விளக்கு | 7 |
| பெருந்துக் கலசம் | 7 |
| ஆக உருப்படி | 40 |

விருந்து

| | |
|---|---|
| அரிசி வள்ளம் | 1 |
| [2] பருப்பு வள்ளம் | 6 |
| பாக்கு | 10 |
| வெற்றிலை | 20 |
| பழம் | 10 |
| தேங்காய் | 1 |

மேலும் ஆக 1 விருந்தெல்லாம் வெருநிச்செலன்றுபோய் வாச லிலே வைக்கவும் விருந்து பணம் 5

அந்த ஆசாரிகளுக்கு கலியாணத்து

| | |
|---|---|
| ஏருந்துப்பாவை | 12 |
| படக்கு | 18 |
| தண்ணீர்க்கலயம் | 5 |
| வாழைப் பூவு | 6 |
| தீபகம்பம் | 5 |
| விளக்கு | 5 |
| ஆக உருப்படி | 44 |

| | | |
|---|---|---|
| விருந்து | அரிசி வள்ளம் | 1 |
| | பருப்பு வள்ளம் | 4 |
| | பாக்கு | 10 |
| | வெற்றிலை | 20 |
| | பழம் | 10 |
| | தேங்காய் | 1 |

---

1. குருக்கள் என்பது எந்தசாதி என்று தெரியவில்லை.
2. பருப்பு வள்ளம் ½ என இருக்கலாம்.

மீது யெல்லாம் எழுதி வைத்துக்கொண்டு அவர்கள் வருஷ மெல்லாம் கொண்டு வந்து மொழுத்துப் பாவித்து முன்னே வசித்து பூசை பண்ணி அவர்கள்[1] மேல் வாத்தியத்துடன் எடுத்துக் கொண்டு போகவும் விதத்து

| | |
|---|---|
| படிஅரிசி | [illegible] |
| பருப்பு படி | 1 |
| பாக்கு | 10 |
| வெத்திலை | 20 |
| சக்கரை படி | 6 |
| பணம் | 8 |

மற்ற பனர் பட்டரை சாதியில் கல்யாணத்துக்கு செய்யத்தேவாளும் சத்தம் பிரகாரம் அவரவர்கள் சாதியில் பெத்தவை கேள்விசெயின அந்தப் பிரகாரம் கேட்டு கல்யாணத்துக்கு முகூர்த்தியகள் எல்லாம் குடுத்து உவக்கு உண்டான வாத்தியங்கள் செல்லாம் கையிலே வாங்கிக் கொள்ளவும்

ஒரு பணத்துக்கு[2] கருவு விட்டால், ஒரு பணம், ஒரு படி நெல்லும், ஒரு கட்டுக் கரும்பட்டிகையும், பாக்கு வெத்திலையும் பழமும் வைத்து கன்றித்து கோவிலுக்குக் கொண்டுபோய் வைத்தாலும் அதுக்கு ஒரு மிடாவும் ஒரு தாளியும் குடுத்து வரவும் இந்தப் பிரகாரம் நிருதி செய்து வருகிறேன்.

[3]குதிரைகள் பண்ணைச் சொன்னதும் பணமும் பாக்கு வெத்திலையும் மிடியன்னும் குடுத்தேவாளும் அந்த பணத்துக்கும் பன்னைச் சொன்னதும் குதிரைக்கு அக்கினி மாடு சாத்துகிறபோது பொங்கலுக்கு 5 வள்ள நெல்லும், ஆட்டுக்கிடாவும், பாக்கு வெத்திலையும் பழ தேங்காயும் குடுத்தும் பொங்கல் வைக்கவும் குதிரைக்கிவள்ளை கிலையுக்கு பணம் 1 பசுவின் பால் வள்ளம் 1 எண்ணுப்பு சாக் வள்ளம் 2 கன்றிறப்புக்கு பணம் 1 ஒரு வள்ள நெல்லு ஒரு அச்சு கருப்பட்டி பாக்கு வெத்திலை பழ தேங்காய் சாம்பிராணி இது யெல்லாம் குடுத்தான் வந்தன்னா மொழுதி கன்றிறக்கும்போது ஒரு ஆட்டுக் கிடாய் வெட்டிக் கோவிலுக்குக் கொண்டுபோய் வைக்கவும்.

---

1. மேள
2. நோய் நொடி வரும்போது உருவாரம் (பொம்மை) செய்து செலுத்துவதாய் கிராம தேவதைக்கு வேண்டிக் கொள்வார்கள். அதுவே கருவு எனப்பட்டது.
3. கிராமதேவதை, அய்யனார் கோயிலில் மண் குதிரை.

கரியாட்டக் குதிரைகள் செய்தால் செலவு அந்த வள்ள நெல்லு, ஆறு வள்ள கோட்டை முத்து, பருத்தி ஒரு தூக்கு, கருப்பட்டி ஒரு தூக்கு, ஆட்டுக்கிடாய் ஒன்று இந்த சவரதினையெல்லாம் கொடுக்கிறது.

[1]தூப்பர்களுக்கு, முட்டி ஒரு பணத்துக்கு 60, மிடா ஒரு பணத்துக்கு 8, மிருதாசி 10, தூப்பர்கள் வருடவரம் கொடுக்கிறது என்னவென்றால் ஒரு பணத்துக்கு ஒரு மிடா கருப்பட்டி. ஒரு கோட்டை நெல்லு, ஒரு குடை, [2]செவரம் ஒரு குடை.

[3]கெட்டும் வீடு கட்டினால் பன்னிரையத்து(க்கு) ஒரு பிராயில் வீடு கிற ஓலைகளும், கிளைகளும் கொடுத்துவிடுகிறோம். சிறப்பு அந்த பணத்துக்கு மேல் வரிக்கச் செலவு சொன்னதை யாருக்கு அரிசி வள்ளம் 10 பருப்பு வள்ளம் 5 கருப்பட்டி தூக்கு 1 நெய்ப்படி 2½ இது எல்லாம் கொடுத்து ஒரு மாடு கன்றுத்தயும் கொடுக்கிறது.

[4]துரைகளுக்கு அம்பஞ்சி மனிய வேணுமென்றால் படி போட்டால் மனிக்கிறது, படி போடாமல் போனால் நீக்கல் மனிய வேண்டிய தில்லை.

கெடிபாரசலில், பட்டணவாசலில், குளம், மனிய வேணுமென்றால் அரமனைக்கு ஆயிரம் மிக்கிக்கு 5 பணம். குடியான பேர்களுக்கு குளம் மனிய வேணுமென்றால் ஆயிர மிக்கிக்கு ஆறு பணம். இந்தப் பிரகாரம் திருதி செய்து இருக்கிறார்கள்.

[5]சன்னதி வாசலில் கிராம சாந்தி செய்கிறது கொண்டு திருநெ லண்டமே அல்லாமல் வேறெ ஒருத்தர் செய்யப் போகாது. கிராம சாந்திக்கு கொடுக்கிற தென்ன வென்றால் ஒரு பணம் காணிக்கை,

---

1. தூப்பர்—கள் இறக்கும் சாணார்.
2. பனம்பழக் கட்டது.
3. கெட்டி வீடு
4. அம்பஞ்சி மனிதல் என்றால் என்னவென்று தெரியவில்லை.
5. கோயில் திருவிழாக்கள் தொடங்குமுன், நள்ளிரவில் ஊரைச் சுற்றி செய்யும் பூசை. இரத்தம் கலந்த சோற்றை நள்ளிரவில் கோயிலைச் சுற்றி எட்டுத் திசையிலும் உள்ள பேய்களுக்கும், சிறு தேவதைகளுக்கும் அர்ப்பணித்துப் பூசை செய்தல்.

[1]சோமனும், அஞ்சு வன்ன நெல்லு, ஒரு ஆட்டுக்கிடாய் ஒரு [2]விருகனும் பாக்கு வெத்திலை தேங்காய் பழம் சாம்பராணி இது வெல்லாம் குடுக்கிறது. கிராமங்களிலே யிருக்கிற மணியகாரர் களுக்கு சாமானம் 1 உருப்படி 8 குடுக்கவு(ம்). இந்த வகை பிற காரங்களுக்கு வேஷ்டியும் குடுக்கிறது தாசம் பணம் குடுத்து அனுப்புகிறது.

[3]முத்தாலம்மன் கோயில் வேலையெல்லாம் அதுக்கு பணம் மூணு. ஒரு பணத்து சித்தாடை, ஒரு [4]சோடு [5]கண்மலரு ஒரு சோடு பொட்டு [6]காறையும், கண் திறக்கும்போது ஒரு வன்ன நெல்லு ஒரு அச்சுக் கருப்பட்டியும் பாக்கு வெத்திலையும் பழம் தேங்காயும் ஆட்டுக்கிடா யும் 1 இந்த வஸ்திரமெல்லாம் உண்டு செய்து குடுத்து இருக் கிறோம்.

இந்தப் பிரகாரத்துக்கு கொங்கு 24 நாட்டுக் கவுண்டர்களும், கொங்கத் திருநீலகண்டத் அனைவோரையும் கூட்டி வைத்துக் கொண்டு சேரமான் பெருமாள், ரயத்து, 24 நாட்டு குடியானவோத் களும் கவுண்டர்களும், செட்டி, வருத்தவர், பலபட்டரையும் கூடி [7]நிலை ஒருதலை செய்து கல்லும் காவேரியும் புல்லும் பூமாதேவியும் [8]சந்திராதித்தனுள்ள காலத்திலும் இந்த சாசனத்தின் உண்டாகிய படி நடனுமல் செய்து கொள்ளுமென்று பதுக்கரை செல்லாண்டி யம்மன் முன்பாகவும், காளியம்மன் முன்பாகவும் வகைக்கை போட்டுக் கொடுத்து விட்டோம்.

---

1. சோமன்-மேல்துண்டு-உயர்வகைத் துணியால் ஆனது.
2. விருகன்-வராகன் (பொன் நாணயம்)
3. நாயக்கர் குலதெய்வம் திருவிழாவின்போது பச்சை மண்ணால் அம்மன் உருவம் செய்து வடாகம் பூசை செய் வர். திருவிழா முடிந்ததும் இறுதிநாள் ஆறு அல்லது கிணற்றில் இறக்கி விடுவர்.
4. சோடு-சோடி (இரண்டு)
5. கண்மலர்-வெள்ளியில் கண்போல் செய்த தகடு
6. காறை-காலில் அணியும் ஒரு வகை அணி.
7. நிலை நாட்டுதல்-உறுதிசெய்தல்
8. சந்திரன், சூரியன் உள்ளவரை

மித்திரை [1]விசுறுதம் பேசி, மிக்கப் [2]பொய்பென்றும் சொன்ன பேர்கள் தங்களுடைய மாதாவையும், தங்களுடைய குருவுக்கும், தங்களுடைய குலதெய்வங்களுக்கும் துரோகம் பண்ணினதும் பெற்ற பலனுண்டோ அந்தப் பலனுண்டாகும்.

அப்படி பாவதோஷங்களுக்கு உட்படாமல் புண்ணியத்தை நினைத்து நாம் காசியில் கெங்கை தீர்த்தத்தில் [3]இபத்தானம் செய்து காசி விஸ்வநாதரையும், [4]விசாலட்சியம்மனையும் சேவித்த பலன் பெறுவார்களாகவும், ராமேஸ்வரத்தில் தீர்த்தமாடி ராமலிங்கரையும் சேவித்த பலம் பெறுவார்களாகவும், [5]மதுக்கரையில் தீர்த்தமாடி சொக்கநாதரையும் மீனாட்சியம்மனை சேவித்த பலன் பெறுவார்களாகவும், மதுக்கரையில் உடைய காவேரியில் தீர்த்தமாடி மதுக்கரை செல்லாண்டியம்மன் திருக்காரிய புண்ணிய பாக்கியத்தைக் கொடுத்து [6]ரக்சபாருவும். மதுக்கரை செல்லாண்டியம்மனும் காவேரியம்மனும் ரக்சிக்கவும். திருநீலகண்டரும், [7]சிவகாமியம் மனும் காக்க வேணும். மாரியம்மனும் படை வேட்டையம்மனும் காக்க வேணும். சிவமயம்.

1. விசுறுதம்-ஏளனம்
2. பொய் எனப் படிக்கவும்
3. இபம்-யானை, யானையைத் தானம் செய்வதில்லை. பசுவை நினைத்து எழுதப்பட்டு இருக்கலாம்.
4. விசாலாட்சி என வாசிக்கலாம்
5. மதுரையில் என இருக்க வேண்டும்
6. ரக்சபார்-இரட்சிப்பார் (காப்பார்)
7. திருநீலகண்டரின் மனைவி

# பட்டயத் தமிழ்

மருக்கரைப் பட்டயம் என்னும் இச்சுவடியினைப் படிக்கையில் உள்ளத்தில் தோன்றும் எண்ணம் இது தமிழா? இந்தத் தமிழ் நமக்கு வேண்டுமா? இப்பட்டயத்தை அச்சிட்டு தமிழின் இனிமைக்கும் பெருமைக்கும் இழுக்குத் தேட வேண்டுமா?

இது தமிழ்தான். இன்றைய தமிழல்ல. குறைந்த அளவு ஒரு நூற்றாண்டிற்கு முன் தமிழகத்தில் பெரும் புலவர்கள் தவிர, எளிய மக்கள் வழங்கி வந்த தமிழ். பேச்சு வழக்கிலான திரிபுகள் எழுத்து வழக்கிலும் இடம் பெற்றுள்ளது. கல்லாமை பரவலாக இருந்த காலத்தில், படித்தவர்கள் ஒரு சிலரே இருந்த காலத்தில் கோலோச்சிய தமிழ். எனினும் இதிலுள்ள பிழைபட்ட வடிவங்களைச் செப்பம் செய்து மூல உருவங்களை உணர்ந்தால் உவப்பாக இருக்கும். நாட்டில் உயிருடன் வழங்கி வந்த நல்ல தமிழ்ச் சொற்கள் பலவற்றைப் பொறுக்கி எடுக்க முடியும். ஏட்டிலே தேடாமல், நாட்டுப்புறம் சென்று மக்கள் நாவில் புழங்கும் மொழியை ஆராய்ந்தாலே இதிலுள்ள பல தமிழ்ச் சொற்களின் உயிர்ப்பு விளங்கும். இதில் வடமொழியின் ஆதிக்கம் அதிகமாக இல்லை. ஓரோ வழி கலந்துள்ளது.

இந்தத் தமிழ் தமிழகத்து மொழி வரலாற்றை ஆராய்வோருக்கு மிகவும் இன்றியமையாதது. தமிழகத்தில் மணிப்பிரவாளம், படித்தவர்களிடையே ஆதிக்கம் செலுத்தியபோது பாமரர்களிடையே வழங்கிய தமிழாகலின் ஆராய்ச்சியாளர்களுக்கு இது ஒரு கருவூலம்.

இக்கால நாகரிக இளைஞர்கள் அணியும் ஆடை அழகினைத் தமது முப்பாட்டனாரின் மூலக்கச்ச வேட்டியும், வெற்றுடம்பும் எண்ணிப்பார்க்கவே கூச்சமாகத்தான் உள்ளது. அதற்காக அவர் நமது பாட்டனல்ல என்று சொல்வது பொருந்துமா? அதுபோல இந்தச் சுவடியை எழுதியவரும் தமிழரே. பாசையின் அதனை ஒதுக்குவது முறையல்ல.

தமிழகத்திலேயே ஒரு காலத்தில் சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, முதலியவற்றை ஒரு பொருட்டாக மதித்தல் இல்லையென்ற எண்ணம் நிலவியது. அதன்படி அவ்விலக்கியங்கள் போற்றுவாரின்றி அழிந்து போயிருந்தால் என்னவாகியிருக்கும்?

கொங்குவேளிர் பெருங்கதையைக் கண்டு பிடித்த வரலாற்றை எழுதும்போது தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதய்யர் அவர்கள் எடுத்துக் காட்டும் செய்தி அறியற்பாலது. அவர் முன்னுரையின் ஒரு பகுதி.

"இலக்கணக் கொத்துப்" பாயிரம் 7 ஆம் சூத்திரத்தில், 'தொல்காப்பியர், திருவள்ளுவர், கோவையார், மூன்றிலு முழங்கும்' என்பதன் உரையில் 'திருவைக் கோவைக்கும் கூட்டுக; மாணிக்கவாசகர் அறியாத் சிவனே யென்பது திண்ணம். அன்றியும் அழகிய திருச்சிற்றம்பலமுடையார் அவர் வாக்கிற்கு அவந்து இரந்து அருமைத் திருக்கையால் எழுதினார். அப்பெருமையை நோக்காது சிந்தாமணி, சிலப்பதிகாரம் மணிமேகலை, சங்கப் பாட்டு, கொங்குவேள் மாக்கதை முதலியவற்றோடு சேர்த்து அச்செய்யுட்களோடு ஒன்றுக்குவர்;... பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண்கீழ்க்கணக்கு இராமன்கதை, நளன்கதை, அரிச்சந்திரன் கதை முதலிய இலக்கியங்களையும் ஒரு பொருளாக எண்ணி வாணாள் வீணாள் கழிப்பர்' என்று ஸ்ரீ சாமிநாத தேசிகர் எழுதியுள்ள பகுதியிற் காணப்படும் 'கொங்குவேளர் மாக்கதை' என்பது ஞாபகத்திற்கு வந்தது. உடனே இராமாயணக் கதை முதலியவற்றைப் போலவே இது கொங்குவேளென்னுமொருவனுடைய கதையாக இருத்தல் வேண்டுமென்று எண்ணி மேற்கூறிய உபகாரிகளைக் கேட்டு அப்புத்தகத்தை வாங்கி வைத்துக் கொண்டேன்."

"ஸ்ரீ சாமிநாத தேசிகர் வெறுத்துக் கூறிய வாக்கியப் பகுதி அப்பொழுது ஞாபகத்திற்கு வாராவிடின் இந்நூலை வாங்கி வைத்துக் கொள்வதற்கு இடமில்லை. அவர் வைதது இந்நூலுக்கு வாழ்த்தாக முடிந்தது. பெரியோர்களால் செய்யப்படும் அவமதிப்பும் கௌரவமுடையதாகுமென்பது திண்ணம். எனவே தமிழில் வந்த எதையும் ஒதுக்காமல் பாதுகாத்தல் இன்றியமையாதது. வரலாறு தொகுக்கும்போது விருப்பு, வெறுப்பின்றி எல்லா ஆவணங்களையும் ஆராய்தல் வேண்டும். எனவே பிழை மலிந்த தமிழாக இருந்தாலும் அதைப் பதிப்பிக்க முனைந்தேன்."

நமது சின்னஞ்சிறு பிள்ளை சேற்றில் விளையாடி வரும்போது பார்க்கப் பொறுக்காது. எனினும் குளிப்பாட்டி எடுத்தபின் கொஞ்சிப் பெருமிதமடைகின்றோம்? அவ்வாறே பட்டயத் தமிழையும் பிழை நீக்கித் தமிழ் ஞானம் கண்டு ஆராய்வோமாக.

# பட்டயச் செய்தி

1. ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகத்தில் நிகழ்ந்த சமுதாய ஒப்பந்தம் ஒன்றின் விவரம் தருகிறது இப் பட்டயம். செப்புப் பட்டயம் பழைய கோட்டைப் பட்டக்காரர் வசம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதன் நகல் ஓலைச்சுவடியில் கிடைத்துள்ளது.

2. இச்சுவடியைப் போற்றிப் பாதுகாத்து அளித்தவர் சேலம் கிடாஸ்டு டவுன் ஸ்கூல் தமிழாசிரியர் புலவர் கு. சுந்தரசாமி அவர்கள். இவரது சொந்த ஊர் இராசிபுரம்.

3. காலம்

பட்டயத்தில் ஒப்பந்தம் நடைபெற்ற காலம் கலியுகக் கணக்கிலும் சாலிவாகனக் கணக்கிலும் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இரண்டும் ஒத்துவரவில்லை.

கலியுக சகாப்தம் 4360 — கி.பி. 1259

சாலிவாகன சகாப்தம் 1807 — கி.பி. 1885

இவ்விரண்டு ஆண்டுகளும் விசய வருடம் அல்ல. எனவே ஒப்பந்தம் செய்து கொண்ட அதே நாளில் பட்டயம் எழுதப்படவில்லை என்பது புலனாகும். முற்காலத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்று வழி வழியே வந்து பிற்காலத்தில் எழுதப்பட்டுள்ளது.

விசய வருடம், மார்கழி மாதம், பதினேழாம் நாள் தட்சிணாயனம், பூர்வபட்சம் திதி, திருவோண நட்சத்திரம், சுப யோகம் பாலவ கரணம், கும்பலக்கினம் கொண்ட நாள் இப்பட்டயம் எழுதப் பட்டதாகச் சொல்லப்படுகிறது. இது பின்னாளில் பட்டயம் எழுத்து வடிவம் பெற்ற நாளாக இருக்கலாம்.

4. மன்னர்கள்

இதில் உள்ள அரச பரம்பரை

| | |
|---|---|
| பரீக்ஷித்து மகாராசா<br>செனமேய செயன் | மகாபாரதத்தில் சொல்லப்படுபவர்கள் |
| நரேந்திர விக்ரமாதித்தன்<br>போசராசன் | கதைகள் மூலமாகத் தமிழ் நாட்டிற்கு அறிமுக மானவர்கள். |
| சேரராசன்<br>சோழராசன்<br>பாண்டியராசன் | தன் நிலையிழந்து மறைந்து விட்டனர் |

| | |
|---|---|
| அச்சுததேவராயர்<br>பிரதாபருத்ரராயர்<br>நரசிம்மராயர்<br>கிருஷ்ணராயர்<br>அரசராயர் | } விஜயநகர மன்னர்கள் வழியில் சிலர் |

அவருடைய ராயர்—ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர் அவருடைய காரியக்காரர்கள்.

1. திருமலை நாயக்கர்
2. வெங்கடபதி நாயக்கர்
3. கிருஷ்ணப்ப நாயக்கர்

இப்பட்டயம் எழுத்துவடிவம் பெற்றது இக்காலத்தில் தான். ஆங்கிலேயர் வருகைக்குச் சற்று முந்திய காலம். சுமார் 300 ஆண்டு களுக்கு முன்னதாக இருக்கலாம்.

6. எல்லை பிரித்தல்

மதுக்கரையின் முன்னொரு காலத்தில் சேரர், சோழர், பாண்டியர் ஆக மூவருக்குமான எல்லை பிரித்ததாகப் பல குறிப்புகள் கிடைக் கின்றன. ஆனால் தெளிவான மூலப் பட்டயம், கல்வெட்டு, ஏடு ஏதும் கிடைக்கவில்லை. இந்தச் செய்திக்கும் இப்பட்டயத்தின் பின் வரும் செய்திகளுக்கும் சம்பந்தமில்லை. எல்லை பிரித்தது வேறுகாலம். அந்தப் பழைய செய்தியும் இதிலே கூறப்படுகிறது.

மதுக்கரையில் எல்லை பிரித்ததைப் பற்றிக் "கொங்கு நாட்டு வரலாறு" என்னும் நூலில் 'கோவைக் கிழார்' கோ. ம. இராமச் சந்திரஞ் செட்டியார் பின்வருமாறு கூறுகிறார்.

> "மதிற்கரை கீட்டிசை தெற்கும் பழனி மதிகுடக்குக்
> கதித்துள வெள்ளி மலைபெரும் பாலை கவின் வடக்கு
> மதித்துள நான்கெல்லை சூழ வளமுற்று மேவி விண்ணோர்
> மதித்திட வாழ்வு தழைத்திடு நீள் கொங்குமண்டலமே."

மதிற்கரை என்பது மதுக்கரை என்று இப்போது வழங்கிவருகிறது. இது குளித்தலைக்கு மேற்கே காவேரி ஓரமாக இருக்கும் ஓரிடம். இவ் விடத்தில் செல்லாண்டியம்மன் கோயில் என்ற ஒருகோயில் உண்டு. இதைப்பற்றி ஒரு கர்ண பரம்பரைக் கதை வழங்கி வருகின்றது. சேர, சோழ, பாண்டியர்களான மூவேந்தர்களும் தங்களுடைய நாட்டு எல்லையைப் பற்றி வாதம் செய்து கொண்டிருக்கையில் அம்மூவரும் மதுக்கரை செல்லாண்டியம்மன் கோயிலுக்கு அருகில் போராடினார்களாம். அப்போது கொங்கு வேளாளரில் சிறந்த வயவர் ஒருவர் அம்மூவேந்தர்களுக்கும் மத்தியஸ்தம் செய்து

செல்லாண்டியம்மன் கோயிலையே அவரவருடைய நாடுகளுக்கு எல்லையாகக் கொள்ளும்படி. சொல்லவே அம்மூவேந்தர்களும் ஒத்துக் கொண்டு மிகவும் மகிழ்வுற்று அக்கவுண்டருக்குக் கொங்கு மண்டலத்து 24 நாடுகளுக்கும் தலைமைப்பட்டம் கட்டிவிட்டுச் சென்றார்களாம். அந்த ஒப்பந்தத்தின்படி செல்லாண்டியம்மன் கோயிலுக்கு மேற்கே சேரநாடு என்றும் கிழக்கே சோழநாடு என்றும், தெற்கே பாண்டிய நாடென்றும் கணிக்கப்பட்டதாம். அக்கோயில் மூவேந்தர்க்கும் பொதுவாம். இவ்வாறு வழங்கும் கர்ணபரம்பரைக் கதையினால் சேரநாட்டு எல்லை மதுக்கரை வரையில் சென்றது எனக் கொள்ளவேண்டும். இதில் கொங்கு நாட்டைச் சேர நாட்டுடன் கலந்து வைத்திருப்பதைக் கவனிக்கலாம். ஆகவே இக்கதை பிற்காலத்திய கதையாக இருக்கவேண்டும். இதைப்பற்றிப் பின்னும் விவரமாக ஆராய்வோம்.''

எனவே எல்லை பிரித்த செய்தி மதுக்கரையின் சிறப்பைக் கூற வந்த பழைய நிகழ்ச்சி எனக் கொள்ளல் வேண்டும்.

7. மாநாடு

இனிமேல் தான் பட்டயத்துச் செய்திகள் தொடங்குகின்றன. மாநாடு கூறுகின்றது. மாநாட்டில் கலந்து கொண்ட கவுண்டர்களின் பெயரும் நாடும் கொடுக்கப்பட்டுள்ளன. இவர்களுடன், 'கட்டுக் காணி' என்றழைக்கப்படும் பல்வேறு தொழிலாளர்கள் கூடியுள்ளனர். இவர்கள் அனைவருடனும் ஒப்பந்தம் செய்துகொள்ளும் வேட்கோவர் திரண்டுள்ளனர். இவர்களின் பெயர்கள் சொல்லப்படவில்லை. கலந்து கொண்ட கவுண்டர்களின் பெயர்களும், அவர்களது நாடும் வருமாறு :

| | |
|---|---|
| 1. தென்கரை நாடு | —வேணுவுடையாக் கவுண்டர் |
| 2. காங்கய நாடு | —காங்கய மன்றாடியார் |
| | —பல்லவராயக் கவுண்டர் |
| | —சர்க்கரைக் கவுண்டர் |
| 3. பூந்துறை நாடு | —வாரணவாசிக் கவுண்டர் |
| 4. அரைய நாடு | —தீர்த்தக் கவுண்டர் |
| 5. மணல் நாடு | —காளியப்ப கவுண்டர் |
| 6. வெங்கலநாடு | —காத்தியப்ப கவுண்டர் |
| | —நீலியப்ப கவுண்டர் |
| 7. தட்டயநாடு | —இராசியண்ண கவுண்டர் |
| 8. கிழங்கு நாடு | —செம்பாக் கவுண்டர் |
| 9. தலைய நாடு | —பெரியக் கவுண்டர் |
| | —கல்லியக் கவுண்டர் |

10. அண்டநாடு — பெரிய தம்பி கவுண்டர்
11. வைகாவூர் நாடு — மங்கைக் கவுண்டர்
— பழனிக் கவுண்டர்
12. நல்லுருக்க நாடு — மரியாண்டி கவுண்டர்
13. ஆனைமலைநாடு — காளிங்கராய கவுண்டர்
கோப்பணக் கவுண்டர்
14. பொன்கொழிக்கும் நாடு — தெய்வசிகாமணிக் கவுண்டர்
15. தலையபுதூர் நாடு — தர்மராய கவுண்டர்
16. வாரக்க நாடு — பொன்னப்ப கவுண்டர்
17. ஒடுவங்கநாடு — வேலுமணிக் கவுண்டர்
18. காஞ்சிக் கோயில் நாடு — காசிக் கவுண்டர்
19. பருத்திப் பள்ளி நாடு — பழனியப்பக் கவுண்டர்
20. குறும்ப நாடு — இராசியண்ண கவுண்டர்
21. பூவாணிய நாடு — குமாரவேலுக் கவுண்டர்
22. இராசிபுர நாடு — நல்லதம்பிக் கவுண்டர்
23. வடகரை நாடு — சின்னதம்பிக் கவுண்டர்
24. வாழவந்தி நாடு — செம்பாக் கவுண்டர்.

ஆக 24 நாட்டின் சார்பாக 30 பேர் கலந்து கொண்டனர்.

இவர்களோடு ஒப்பந்தம் செய்து கொண்ட தொழிலாளர்களின் பெயர்கள் ஏதும் காணப்படவில்லை.

8. கட்டுக் கனி

ஒரு பண்ணையக்காரரும் அவருக்குத் தொழில் செய்யும் வண்ணான், நாவிதன், குடிகள், போன்ற தொழிலாளிகளும் சேர்ந்து ஒரு கட்டுக்கனி என அழைக்கப்படுகிறது (கட்டுக்கவி என்று சுவடியில் காணப்படுவது பிழை வடிவம்).

9. வேட்கோவர்

எல்லா வசதிகளும்படைத்த கவுண்டர்களுக்கும் புதுப்புது வகையான பாத்திரங்களை (தலைபாண்டம்) பயன்படுத்த வேண்டுமென்ற ஆர்வம் பிறக்கின்றது.

அதனால் நாட்டுக் கொழுந்தர் விருதும் 24 பேர் பாண்டிய நாடு சென்று வேட்கோவர்களை அழைத்து வருகின்றனர்.

சுவடியில் 'பாண்டிய நாடு' என்றுள்ள போதிலும் சோழ நாடு சென்று அழைத்து வந்ததாகவே செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. சோழன் பூர்வபட்டயம் என்ற நூல் சோழ நாட்டிலிருந்து வேளாளர்களை அழைத்து வந்து, காடுகெடுத்து நாடாக்கி ஊர்கள் அமைத்த விபரம் கூறுகிறது. அதற்குச் சற்றே பிந்திய காலத்தில்

இத்தகைய சோழநாடு சென்று வேட்கோவரை அழைத்து வந்திருக்கலாம். சோழநாட்டிற்கும் கொங்கு நாட்டிற்கும் நடுவில், மதுக்கரை உள்ளது இங்குக் குறிப்பிடத் தக்கது.

10. திருநீலகண்டர்

அழைத்து வந்த வேட்கோவருக்குக் 'கொங்கத் திருநீலகண்டர்' என்று பெயர் தருகின்றனர்.

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீலகண்டத்துக் குயவனார்க்கும் அடியேன்

என்று திருத் தொண்டத் தொகையில் முதலாவதாகக் குறிப்பிடப் படும் அடியார் திருநீலகண்டர் ஆவர். இவர் வேட்கோவர் குடியில் பிறந்தவர். சிறந்த சிவபக்தர் எப்போதும் 'திருநீலகண்டம்' என்று கூறிவரும் பழக்கமுடையவர் ஆதலின் அவரது இயற் பெயரை விடத் திருநீலகண்டர் என்ற பெயரே நிலைத்து விட்டது.

இளமைக் காலத்தில் தாசி ஒருத்தியை நாடிச் சென்று திரும்பி வந்த கணவரை, அவரது மனைவி ''இனி எம்மைத் தொடாதீர்'' என்று பன்மையில் கூறியதால் பின்னர் மனைவியையும் பிற பெண்டிரையும் நினையாமலேயே முதுமை எய்தினர்.

இவரின் பெருமையை உலகுக் குணர்த்த சிவபெருமான், தூயவர் வேடம் பூண்டு, தன் திருவோட்டைத் திருநீலகண்டரிடம் கொடுத்து வைத்துப் பின் தானே மறைத்து விளையாடுகிறார். ஓடு மறைந்ததை அறியார் நீலகண்டர். ஓட்டைத் தான் தொலைக்க வில்லை எனில் மனைவியின் கரம் பிடித்து ஆழக் குளத்தில் மூழ்கி சத்தியம் செய்துதரக் கேட்கிறார். இரவலர் வேடதாரியான சிவனும். யான் செய்த சத்தியத்தின்படி, அப்போது மனைவியைத் தொட முடியாத நிலையை உலகிற்குச் சொல்ல வேண்டியதாயிற்று. இவரது சத்தியத்தின் மாட்சியை உலகம் அறிந்துகொண்டது.

இருவரும் ஒரு கோலின் இருமுனைகளையும் பிடித்துக்கொண்டு குளத்தில் மூழ்கி எழத் தம் முதுமை நீங்கி இளமை பெற்றதாக பெரிய புராணத்தில் சேக்கிழார் கூறுகின்றார்.

வேட்கோவர் தம் குல முதல்வராகத் திருநீலகண்டரைப் போற்றிப் பாராட்டுவர். ஆண்டுதோறும் அவர் பிறந்த ஓரையில் குருபூசை இக்காலத்தும் கொண்டாடுவர். அதனாலேயே 'கொங்கத் திருநீலகண்டர்' என்று பெயர் சூட்டப்பட்டனர்.

## 11 உரிமைகள்

நாடு விட்டு நாடுவரும் வேட்டுவர், தம் சுற்றத்தை விட்டு நீங்கி வருவதால் பாதுகாப்பு கோருகின்றனர்.

அத்தகைய பல உரிமைகள் வழங்கப்படுகின்றனர்.

1. நாட்டுக் கொங்குவேளிர இருப்பாரதனால்: கவுண்டர்கள் தம்மோடு சமமாகப் பாவித்து, "கொள்வினைக்கூடம் ஒன்று உண்பதுவும், தின்பதுவும் சமம், திருமண உறவு மட்டும் இல்லை" என்று உறுதி யளிக்கின்றனர்.

இன்றும் நாட்டுப் புறத்தில் கவுண்டர்களும், வேட்டுவர்களும் அண்ணன், தம்பி, மாமன், மச்சான் என்று உறவுப் பெயர் சொல்லி அழைப்பதைக் காணலாம்.

2. கவுண்டர்கள் தமது திருமணத்தின்போது செய்யப்படும் சடங்குகளின் பாதியை வேட்டுவரும் செய்துகொள்ள அனுமதிக் கின்றனர். அவை ஆறு:

1. ஒப்பாரி கொட்டி வருதல்
2. வேட்டி அணிதல்
3. நாட்டுக் கல்லுக்கு பெண் அழைத்துப் போய் வருதல்
4. மாப்பிள்ளை குதிரை ஏறுதல்
5. பெருந்தாலி கட்டுதல்
6. காவிளக்குதல்

3. இவ்வாறுமைச் சீர்தவிர வேட்டுவர் தமக்கென உள்ள எல்லாச் சீர்களையும் செய்துகொள்ளலாம்.

## 12. கொழுப்புக்காளை வழி

கூலி ஒருவருக்கு நாழுவள்ளம் (நெல்) அளிக்கப்படும். சாத்தியே நெல்லுக்கட்டு ஒன்று அளிக்கப்படும்.

ஒவ்வொரு தொண்டுக்கும் வீட்டுக்கு இரண்டுபடி நெல் அளிக்கப்படும்.

பின் கண்ட கோவில்களில் பூஜை செய்யும் உரிமை வழங்கப்படுகிறது.

1. அப்பனூர் கோவில்
2. கன்னிமார் கோவில்
3. பண்ணத்துப் பொங்கல்

4. பட்டத்தலைச்சி
5. முத்தாலம்மன்
6. கிராமசாந்தி செய்தல்

13. குடியேற்றம்

கவுண்டர்கள் 24 நாட்டுக்கும் 24 குடும்பங்களை அழைத்து வந்து நாட்டுக்கொரு குடும்பமாகக் குடியமர்த்ததாக இப்பட்டயம் கூறுகிறது.

ஆனால் உண்மையில் 32 குடும்பங்கள் வந்தனவாகத் தெரிகிறது. 24 நாட்டிற்கும் 24 குடும்பம் போக எஞ்சிய எட்டுக்குடிகளும் எட்டு பெரிய ஊர்களில் குடியமர்த்தப்பட்டதாகவும் தெரிகிறது. கொங்கு வேட்கோவர் இன்றும் தம் நாட்டுக் கூட்ட அழைப்பிதழ்களில் இந்த விவரத்தைச் சேர்த்துச் சொல்கின்றனர். "நாடு உறவின் முறையார் வருக" என அழைப்பர்.

ஒவ்வொரு நாட்டுக் குயவர் குடியேற்றப் பங்கீட்டுப் பெருமை இன்று ஆய்வோர்க் குறைந்து விளக்கியுள்ளது.

14. தனபாண்டம்

கொங்கு நாட்டில் திருமணம், மற்றும் விசேடங்களுக்கு மட்பாண்டங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. ஒவ்வொரு குடியினரின் திருமணத்திற்கு இன்னின்ன பாத்திரங்கள் இத்தனை தரவேண்டும் என்றும், அவற்றுக்கு மாற்றாகத் தரவேண்டிய பொருட்கள் என்ன என்ன என்றும் பட்டியல் தரப்பட்டுள்ளன. அவற்றை விரிவாகவும், தெளிவாகவும், பட்டயத்தின் மூலத்தைப் படித்தே தெரிந்து கொள்ளலாம்.

15. பேசிப் பெறுதல்

திருமணம் நிச்சயமானதும் வேட்கோவரை அழைத்து வெற்றிலை பாக்கு வைத்து திருமணச் செய்தி சொல்ல வேண்டும். திருமணத்தன்று பட்டயத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஏனங்களை சுண்ணாம்பு பூசி, செம்மண் கரை கட்டி எடுத்துச்சென்று திருமண வாசலில் வைப்பர். அங்கு அளிக்கப்படும் அரிசி, பருப்பு, கருப்பட்டி, நெய் பணம் முதலிய முன்னர் வைத்து, நீர் அளாவிய பின்னரே திருமண வீட்டார் ஏனங்களை எடுத்து வைப்பர்.

16. சாதிகள்

ஒவ்வொரு சாதிக்கும் வழங்கப்படவேண்டிய ஏனங்களின்பட்டியலும், அதற்கான சீர் வரிசைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. வேளா

ளர்களுக்கு 1 பணம் முதல் 5 பணம் வரை சீரும் அதற்கேற்ப பண்டங்களும் கூறப்படுகின்றன.

பலபட்டடைச் சாதி என்பது கவுண்டர்களுக்கும் தாழ்த்தப் பட்ட மக்களுக்கும் இடைப்பட்ட பல சாதி மக்களைக் குறிக்கும்

தவிர கம்பார வடுக நாயக்கர், சூரியகுல வம்சம், வில்லவுருத்து ஆசாரிகள், சோழிய வெள்ளாளர், பாண்டிய வெள்ளாளர், இராசவக்கள், வடுக ஆசாரிகள், முதலிய சாதியினரின் திருமணத்திற்குத் தர வேண்டிய ஏனங்களின் பட்டியலும், அதற்கிணையான சீர்வரிசை களும் கொடுக்கப்பட்டுள்ளன.

கம்பார வடுக நாயக்கர், தொட்டிய நாயக்கர் என்றும் அழைக் கப்படுவர். முத்தாலம்மனை வணங்குவர். முத்தாலம்மன் விழா வின்போது பச்சை மண்ணில் விக்ரகம் செய்து, கடாயம் சாயம் பூசி வைக்கப்படும். விழா முடிந்ததும் ஆற்றில் அல்லது கிணற்றில் முத்தாலம்மன் சாமியை இறக்கி விடுவர் பூசை உரிமை வேட்டுவ ருக்கு விடப்பட்ட செய்தி முன்னமே கூறப்பட்டுள்ளது.

வில்லவுருத்து ஆசாரிகள், வடுக ஆசாரிகள் என இரண்டு வகையினர் கூறப்பட்டுள்ளனர். பொன்வேலை செய்வோர், தச்சு வேலை செய்வோர் விஸ்வகர்மினராவர். சூரியகுல வம்சம் என்பதும் இராசக்கள் என்பதும் எந்தச் சாதி என்று தெரியவில்லை.

இன்னொரு குறிப்பு கவனிக்கத்தக்கது. கவுண்டர்கள் வீட்டுத் திருமணத்திற்கு மட்டும்தான் வேட்டுவர் ஏனங்களை எடுத்துக் கொண்டுபோய் திருமணப் பந்தலில் வைத்துவிட்டு, சீர்வரிசை களைப் பெற்று வருவார். பிற எல்லாச் சாதியினரும் சீர்வரிசைகளை வேட்டுவரின் வீட்டில் கொண்டுவந்து கொடுத்து வீட்டுத் தாமே ஏனங்களை எடுத்துச்செல்லவேண்டும். சிலர் மேளதாளத்துடன் எடுத்துச் செல்வர்.

கலியாணப் பானைகளை அடுக்கிவைத்து, அவற்றின் முன்னால் சீர்வரிசைகளை வைத்து நீர் அளாவி, கற்பூரம் ஏற்றிவைத்துப் பூசை செய்த பின்னரே எடுத்துச் செல்வது வழக்கம்.

பாதம், பானை, அதன்மேல் ஒரு சின்னக் கரகம், அதன்மேல் பூ கொண்டது மடைக்கப்பானை ஆகும். அவை வெள்ளை அடிக் கப்பட்டு அதில் சிவப்பு, மஞ்சள், பச்சை ஆகிய வண்ணங்களில் அலங்கரிக்கப்பட்டிருக்கும். அதனாலேயே எழுத்துப் பானை எனப் பட்டது.

பலபட்டடைச் சாதியினருக்கு ஆகிய அரசாணிப் பானை என்று சொல்லப்பட்டுள்ளது. வழக்கமான பானைகளுடன், பானை உருவம்

ஒன்று செய்து கல்லைப் பூசி அளிக்கப்படும். மனையறையில் அந்த பாவையின் தலைப்பில் அகல் விளக்கு ஏற்றி வைக்கப்படும்.

மற்ற சாதியினருக்கு, அவர்கள் எந்த வகையில் கேட்கிறார்களோ அந்த வகையில் செய்துதர அனுமதி வழங்கப்படுகிறது.

பிராமணர் வீடு பற்றி இந்தப் பட்டயத்தில் ஒன்றும் கூறப்படவில்லை. அதேபோல தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றியும் ஒன்றும் கூறப்படவில்லை. பிராமணர்கள் திருமணத்திற்கேனும் பானைகள் எதுவும் பெறுவதில்லை. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள் வேட்கோவர் வீட்டிற்கு மேளதாளத்துடன் வந்து பானைகள் எடுத்துக் கொண்டு ஊர்வலமாகச் செல்வது இன்றும் நடந்துகொண்டிருக்கின்றது. குறிப்பாக அவர்களே வசிக்கும் கிளைச்சேரி பக்க வாத்தியங்களுடன் அமர்க்களமாக இருக்கும்.

## 17. உருவாரம்

கால்நடைகளுக்கோ மனிதர்களுக்கோ நலக்கேடு (நோய் நொடி) ஏற்படும்போது சாமியை வேண்டிக் கொள்வர். குணமானதும் உருவாரமோ பொம்மைகளோ செய்து வைப்பர்.

உருவாரம் செய்தபின் ஒரு படி நெல், ஒரு கட்டுக் கருப்பட்டி, பாக்கு வெற்றிலை பழம் முதலியன வைத்து பூசை செய்த பின் கோவிலில் கொண்டுபோய் வைக்க வேண்டும். உருவாரங்கள் சிறிய அளவிலானவை.

பெரிய பண்டிகைகளில் குதிரை செய்தளிக்க வேண்டிக் கொள்வர். அதைச் சொல்லும்போது, பாக்கு வெற்றிலையில் பணத்துடனும், ஒரு பிடி மண்ணுடனும் சொல்லுவார்கள். குதிரைகள் பெரிய அளவில் சுமார் 10 முதல் 15 அடிவரை உயரமாக இருக்கும். கம்புக் கதிர் கம்பு நீக்கப்பட்ட பொக்கையை மண்ணோடு கலந்து பிசைந்து குதிரைகள் செய்வர். உடல் தனியாகவும் தலை தனியாகவும் செய்து, காய்ந்தபின் சுடுவர். சுடுவதற்கு முன்னால் ஆட்டுக்கிடாய் ஒன்று வெட்டி, பொங்கல் வைத்துப் பூசை செய்வர் வேட்கோவர். அந்தப் பூசைக்காக 6 வள்ள நெல்லும், ஒரு ஆட்டுக்கிடாயும், தேங்காய் பழமும் கொடுக்க வேண்டும். பின் உடலையும், தலையையும் இணைத்து கயிறுகள் கட்டி அதன் மீது சுண்ணாம்புக் காரை பூசுவர். குதிரை முழுவதும் வெள்ளை அடித்து, வண்ணங்கள் பூசுவர். கண்ணுக்குக் கருவிழி மட்டும் திட்டமாய் திறந்து வைப்பர். வர்ணச் செலவுக்காக ஒரு பணம், ஒரு வள்ளம் பசும்பால், ஒரு வள்ளம் சுண்ணாம்புக்கல், (சுண்ணாம்பு சால் என்று ஒருபியில் உள்ளது) முறையான வடிவம்கொடுக்க வேண்டும்.

கன்றிறப்பு இறைதிப்பூசையாகும். அப்போது குதிரையின் முன்னால் ஒரு வள்ளம் நெல்லு, ஒரு அச்சு கருப்பட்டி, பாக்கு வெற்றிலை அதில் 2 பணம் வைக்கப்படும். நாயக்கரின் மேலாட சாக்கிராணியும் தரவேண்டும் ஒரு ஆட்டுக்கிடாயும் தரவேண்டும். பூசை செய்வதற்கு முன்னால் கன்றுக்கு கருவிழி திட்டுவர். பின்னர் கிடாயை வெட்டி பூசை செய்வர்.

பூசை முடிந்ததும், இரண்டு பக்கமும் தண்டு கட்டி, குதிரையைத் தூக்கிக் கொண்டு போய் கோவிலில் வைத்து விடுவார்கள்.

குதிரை பட்டுவள்ளாயல் பெரிய அளவில் காளை, பசு, ஆடு முதலியவையும் செய்து வைப்பதுண்டு.

'கனியாட்டக் குதிரை' என்று பட்டயத்தில் கூறப்பட்டுள்ளது என்னவென்று தெரியவில்லை.

18. கன்றூட்டு

நம்பூரிகள் எனப்படும் சாஸ்திரி கள் இறக்குவதற்கான பரிகாரம் வழங்கும் விதம்.

ஒரு பணத்துக்கு 60 முட்டியும், ஒரு பணத்துக்கு 10 இரட்டைத்தானி, 8 மிடா முதலியன. நம்பூரிகள் பணமாகக் கொடுக்கலாம். அல்லது பண்டாரத்துக்கு "ஒரு பணத்துக்கு ஒரு மிடா கருப்பட்டி, ஒரு கோட்டை நெல்லு, ஒரு கூடை சேவல்" தரலாம், பனை ஓலையில் கூம்பு வடிவில் பிடித்து அதில் நெல்லு வைத்துக் கட்டுவர். இது கோட்டை எனப்படும். பனம் பழத்தைத் துண்டு துண்டாகச் சீவிக் காய வைப்பர். இது சேவல் எனப்படும்.

19. வெட்டி வீடு

கொட்டேனர் வெட்டி வீடு கட்டுவதாக இருந்தால், ஒவ்வொரு பண்ணையத்தாரும், ஒரு பனையில் உள்ள ஓலைகளையும் சிறகுகளையும் தரவேண்டும். அத்தோடு கன்றுக்கு ஒரு பசு, அஞ்சு பணம், 10 வள்ளம் அரிசி, 6 வள்ளம் பருப்பு, ஒரு தூக்கு கருப்பட்டி 2½ படி நெய் முதலியன தருவார்கள்.

20. ஆடுகள்

மூட்டுவிக்கிற வீடுகளுக்குக் குடிசை ஓடுகள் வாங்கித் கொடுக்க வேண்டும். ஒரு குடிசை இரண்டாக அறுத்தால் இரண்டு ஓடுகள் ஆகும். அதன் விலை குடியானவர்களுக்கு ஆயிரம் ஒரு

களுக்கு ஆறுபணம். கோவிலுக்காக இருந்தால் ஆயிரம் குதிரைக்கு நூற்று பணந்தான் கிடைக்கும்.

இங்கு 'அரமனை' என்ற சொல்லுக்கு கோவில் என்று பொருள் கொள்ளலாம். திருவிழாக் காலங்களில் தனியார் எத்தனை குதிரை செய்துவைத்தாலும் கோவில் சார்பில் ஒரு குதிரை செய்து வைக்கப்படும். அந்தக் குதிரை 'அரமனைக் குதிரை' எனப்படும். 'அரண்மனை' என்பதன் திரிபாக இருக்கலாம். எனவேதான் "அரமனைக்கு ஆயிரம் பிள்ளைக்கு 5 பணம்" என்ற சொற்றொடருக்கு "கோவிலுக்கு" எனப் பொருள் கொண்டோம்.

## 21. கிராம சாந்தி

கோவில் கிராம சாந்தி செய்யும் உரிமை வேட்கோவருக்கு அளிக்கப்பட்டது. அதற்கான காணிக்கை ஒரு பணம் மற்றும் ஒரு வஸ்திரம், அரை வல்லம் நெல், ஒரு ஆட்டுக் கிடாய், ஒரு வராகன் வெற்றிலை பாக்கு சாம்பிராணி முதலியன. இதில் பணம் 1, வராகன் எனக் கூறப்படுகிறது இரண்டுக்குமுள்ள வேறுபாடு தெரியவில்லை. மற்றும் இந்தப் பத்தியில் (பக்கணி) உள்ள கடைசிஇரண்டு வரிகளின் பொருளும் தெளிவாக இல்லை.

சிவன், பெருமாள் கோவில்களில் திருவிழாக்களில் கிராம சாந்தி செய்தல் மிகவும் முக்கியமான நிகழ்ச்சி. இதுவாரத் திருவிழாவின் முதல்நாள் இரவு நள்ளிரவில் செய்யப்படுவது. பெரும்பாலும் அது அமாவாசைக்கு அருகில் இருக்கும். கும்பிட்டு ஆடு அறுத்து அதன் குருதியை வெள்ளைச் சோற்றில் கலந்து எடுத்துச் செல்வர். தேரோடும் வீதியில் எட்டுத் திசையிலும் உள்ள பலிக்கல் மீது பலி கழிபாடு செய்வர். அவ்வேளையில் மரங்களின் மேல் இருந்து அலறும் அவைகளுக்கு இரத்தச் சோறு எறிவர். இரத்தச் சோற்றை எடுக்கும் முகத்தான் சோறு படைக்கும் ஆவியே மரத்தின் மேல் தூக்கிச் செல்ல முயற்சிசெய்யும் என்பர். அதன் முயற்சியைத் தடுக்க உடன் செல்வோர் அதனைப் பிடித்துக் கொள்வர். ஆக கோழை மனம் கொண்டோர் இவற்றைக் கண்டாலே நடுக்கக் காய்ச்சல் வந்து அவதியுறுவர். அதனால் அன்று இரவு பொதுமக்கள் யாரும் சாலையில் வரமாட்டார்கள். கதவைத் தாளிட்டுக் கொண்டு வீட்டிற்குள்ளேயே இருந்து கொள்வர். இவ்வாறு எட்டுத் திசையிலும் பூசை செய்வதும் ஊர் புனித மடைந்ததாகக் கருதப்படும்.

"சோழன் பூர்வ பட்டயம்" என்ற நூலிலும் கிராம சாந்தி பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. காடு திருத்தி நாடாக்கி, புதிய கோவில்கள்

அமைத்தபோது, கொங்கு நாட்டில் ஆங்காங்கு வாழ்ந்து வந்த பூர்வ குடிகளின் காவல்தெய்வங்கள் இடம்பெறச் செய்தனராம். அவற்றை அமைதிப்படுத்தவே 'இரத்தச் சோறு' படைத்துக் கிராமசாந்தி செய்யப்பட்டதாக அதில் கூறப்பட்டுள்ளது.

கோயில்களில் திருவிழா தொடங்குமுன் முதல்பூசை செய்பவர் சங்க காலத்திலும் வேட்டுவராகவே இருந்தார் என நற்றிணை 293 ஆம் பாடலால் அறியலாம்.

மணிக் குரல் நொச்சித் தெரியல் சூடிப்
பலிகள் ஆர்கைப் பார்முது குயவன்
இடுபலி நுவலும் அகன்தலை மன்றத்து
விழவுத் தலைக் கொண்ட பழவிறல் மூதூர்.
நொச்சி மாலை சூடிய முதிய குயவர்
அவ்வூர்க் கோயில் முற்றத்தில் பலியிட்டு
விழாவினைத் தொடங்கி வைக்கின்றாராம்.

இதே பழக்கம்தான் பின்னர் வளர்ந்து 'கிராமசாந்தி' ஆனதோ வென ஐயுறத்தோன்றுகிறது.

22. முத்தாலம்மன்

முத்தாலம்மன் பற்றியும் ஏற்கனவே சொல்லப்பட்டது. முத்தாலம்மன் சிலை செய்வதற்கு 8 பணம், ஒரு பணத்து வில்லையில் சித்தாடை, ஒரு சோடி கண்மலர் (வெள்ளி), ஒரு சோடி பொட்டுக் காறை தரவேண்டும். கண்திறப்பதற்காக ஒரு வள்ளம் நெல், ஒரு அச்சுக் கருப்பட்டி, பாக்கு வெற்றிலை, பழம் தேங்காய் முதலியவற்றுடன் ஒரு ஆட்டுக்கிடாயும் உண்டு.

23. ஒப்பந்தம்

மேற்கண்டபடி கொங்கு 24 நாட்டுக் கவுண்டர்களுக்கும், புதிதாகக் குடியேறிய கொங்கத் திருநீலகண்டர் எனப்படும் வேட்டுவருக்கும், மதுக்கரைச் செல்லாண்டியம்மன் முன்பாகவும், காவேரியம்மன் முன்பாகவும் ஒப்பந்தம் நிறைவேறுகிறது.

அப்போது சேரமான் பெருமாள், சாமி, 24 நாட்டுக் குடியான வர்கள், செட்டிகளத்தார், பலபட்டறைச் சாதியார் அனைவரும் அங்கிருந்தும் கூடியிருந்தனர். கல்லும், காவேரியும், புல்லும், பூமியும் சந்திரனும் சூரியனும் உள்ளவரை இந்த ஒப்பந்தம் செல்லுபடியாகு மாம்.

## 24. பட்டயத்தின் சிறப்பு

வரலாறு என்பது மன்னர்களின் ஆட்சியாண்டுக் கணக்குகள் மட்டுமல்ல. மக்களின் மனப்போக்கும் பழக்க வழக்கங்களும் காலங்கள் தோறும் எவ்வாறு இருந்தனவென்று காண்டலே வரலாறும்.

கொங்கு நாட்டில் இன்று பழக்கத்திலிருக்கும் பழக்க வழக்கங்கள் சிலவற்றிற்கு இப்பட்டயம் விளக்கம் அளிக்கின்றது. இருபெரும் சமுதாயத்தினிடையே நிலவிவந்த ஒப்பந்தத்தின் எழுத்து வடிவம் கிடைத்துள்ளது. ஏடெழுதுவோரால் சேர்ந்த பிழைகள் பல பெருகி விட்ட போதிலும், மூல வாசகத்தை எளிதில் அனுமானிக்க இயலுகின்றது.

தமிழகத்து வேட்டுவர்களின் பழக்க வழக்கங்களும் மரபுகளும் பெரும்பாலும் ஒன்றாக இருக்க கொங்கு நாட்டவரின் நடைமுறையிலே நிலவி வந்த தனிப்பட்ட மரபுகளுக்கு இப்பட்டயம் விளக்கம் தருகின்றது.

இப்பட்டயத்தின் செய்திகள் நடைமுறையில் மிகவும் பிடிப்புடனிருந்த செய்தி ஒரு நிகழ்ச்சியால் விளங்கும். சுமார் 28 ஆண்டுகளுக்கு முன் கரூர் வட்டாரத்தில் கக்காளிபுரக் கருகில் ஒரு சிற்றூரில் ஒரு வேட்டுவரின் திருமணத்தில், மாப்பிள்ளை குதிரை யேறக் கூடாதென்று அவ்வூர் கவுண்டர்கள் தடுத்து விட்டார்கள். உடனே வேட்டுவர் திருமணத்தை நிறுத்திவிட்டு பழைய கோட்டை வந்து பட்டக்காரரிடம் முறையிட்டுக் கொண்டார்கள். மதுக்கரைப் பட்டயத்தைப் பற்றிய விவரங்களைப் பட்டக்காரர் எழுதிக் கொடுத்ததுடன் உள்ளூர்க் கவுண்டர்களுக்கு ஒரு கடிதமும் கொடுத்தனுப்பினாராம். மீண்டும் உள்ளூர் வந்து அடுத்த நாள் எல்லாச் சடங்குகளுடனும் திருமணத்தை நிறைவேற்றினார்களாம்.

சிறப்பாக நாடு விட்டு, சொந்த பந்தத்தை விட்டு வரும் தொழிலாளிகளுக்கும், நாமே எல்லாம் என்கிறவகையில் "கொள்ளி, கொடை ஒன்று, உண்பதும் தின்பதும் ஒன்று. கொள்வதும் குடுப்பதும் பிரதியம்" என்ற சம உரிமை வழங்கிய நாட்டுக் கவுண்டர்களின் பெருந்தன்மை விளங்குகிறது.

# ஆய்வுகள்

**மதுக்கரைப் பட்டயம் பற்றிய தொடர்பான பணிகள்**

1. மூலச் செப்புப் பட்டயத்தை தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.
2. சோழன் பூர்வ பட்டயத்துடன் சேர்த்து வைத்து ஆராய வேண்டும்.
3. தலையாண்டம் வென்றுமென்பதற்காக 24 நாட்டுக் கவுண்டர்களும் கூடி, பிற நாட்டிலிருந்து வேட்டுவரை அழைத்து வந்தனர் என்றும் அதற்கு முன் கொங்கு நாட்டில் வேட்டுவர் இல்லையா?
4. மதுக்கரைப் பட்டயத்தில் உள்ள 24 நாட்டுப் பெயர்களுக்கும், கொங்கு மண்டல சதக வார்த் தொகைப் பாடலில் வரும் 24 நாட்டுப் பெயர்களுக்கும் உள்ள வேறுபாடுகள் கல்வெட்டில் காணப்படும் நாட்டுப் பெயர்கள்.
5. பணத்தின் மதிப்பு.
6. பல்வேறு வகைப் பாண்டங்களின் படங்களும் அளவுகளும்
7. பட்டயத்தின் காலம், அப்போதைய மன்னர்கள்.
8. மதுக்கரையில் எல்லை பிரித்த வரலாறு.
   அது சேர, சோழ, பாண்டியர் எல்லையா? அல்லது 24 நாட்டு எல்லையா?
9. தொல்லியல் அகழ்வுகளில் கிடைக்கும் மண் ஏனங்களுக்கு இப்பட்டயத்திலுள்ள பெயர் பொருத்துவனவைக் காணவேண்டும்.
10. மக்களிடையே, உயர்வு, தாழ்வு வைப்பு முறையைக் கணிக்கலாம்.

# இருபத்து நான்கு
# நாட்டுப் பட்டயம்

# பிருவத்தி நாஞநாட்டு பட்டயம்

ஸ்ரீமது சகல குண சம்பன்னரான சகல தர்ம கீர்த்தி பராக்ரம பத்தூரான் சித்திர மணிக்களான பத வாக்கிய பிரமாணிக்களான அன்னதான விநோதரான அகண்டிதலட்சுமி அபிஷேகிய சம்பன்னரான பித்ரு தேவ கோத்ரநிஷ்டரான பெருமைசேர பூசகரான விபூதிருத்திராட்ச பரிகாரபரரான அரிபூசை குருபூசை சிவபூசை பூசை மறவாத பெரியோர்களான மகாதேவருக்கு சிசுவானவர்களான சோழன்குலத்தோரேதிரரான குலாலபாமுனிவரான முப்புரிநூலும் தேர்பஞ்சபுமுள்ளவரான பெருக்கிய பவுத்திரரான தொண்டுக்கு தோளில் குடாதவரான ஆண்டவர் சம்பந்தரான வீமவேம்பளி கொண்டவரான கரிகால சோழன் வழுத்த பரிபாலகரான அப்பரும் வழிதோறும் போற்ற பெரியோர்களான அய்யத்தி நாயன் சமுத்தி விருப்பமான திவ்வியம் பவுத்திர முதுமை பேரர் விழுமம் பேர்த்த பெரியோர்களான கிர்தயுகத்தில் கண்ட குர்கண்டீ வென்று கும்பகோணத்திரான திரிதாயுகத்தில் வச்சிரநாபீ வென்று மன்றுடையசேத்திரான துவாபரயுகத்தில் திருமலைக்கரை வென்று ஆனை திருவிலவண்டரான கலியுகத்தில் பட்டி விக்கிரமாதித்தனை வென்று சாலிவாகன இப்படி சதுர்யுகத்துக்கும் தன்மை பெற்ற பெத்த பெரியோர்களான ஸ்ரீ திருவிலகண்ட சுவாமியார் திருவிளத் திருவும் சிவசமயமெய்மலரில் தெண்டனிட்ட விண்ணப்பம்.

இப்பொழுது வத்தனூர் பட்டகாரர் குடையூர்த்தும் பட்டகாரர் இரெட்டு பட்டகர் வேங்கை சித்தரை செங்கு பிறவத்திநாடு ஒட்டுநன்ன திருவில கண்டர் மூன்று புலவரும் அகலேடும் சங்குவ தீர்த்தவாரிய அபிசேகம் பெற்று விளங்கிய வம்வாணிக்குழத்தின் வகையாக வந்து கூடினார்கள். முன்னே 24 நாட்டு கவுண்டர்கள் நாடு பிரிச்சி காணி குறித்து வைவளப்பட்டயம் பெறுதி கொடுத்த பிரகாரம் பேசின பன்னி பிறவத்தி நாஞ நாட்டு பட்டயம் வேதநாயகி அம்மன் சன்னதி முன்பாக பெறுவது.

அப்போ 1 கலியுக சகாப்தம் (சதுவகமலி)க்கு மேல் செல்லா நின்ற ஆனந்த வருஷம் வைகாசி மாதம் 13-தேதியில் பெறுதி வது — சிவமயம்.

தென்னவ காடு...

வைகூர் பகீ – பாகர் கொத்தனூர் வாழியப் பதி தர்மிக்கவும் அப்பரியோடும் ரக்ஷிக்கவும்

## காங்கய நாடு...

காங்கயம் காடையூர் கல்லாபுரம் பாப்பினி வீரசோழபுரம் சிவமலை பட்டாலி கீரனூர் வெள்ளகோவில் தென்னத்தாளம் வெள்ளூத்தூர் முத்தக்கரை நாவலூர்

## பூந்துறை நாடு...

சக்கிரி சக்கறையவனைத்தும் சேக்கடனத்தம் மொடக்கறையும் கந்தி வடி வத்தவரி கல்வானி அறைப்பொனச்சி மண்டபத்தூர் மனலி கொக்கலை கன்னப்புண்டி கொலிக்காரனத்தம் பூந்துறை வெள்ளோடு நசையனூர் வெள்ளமாத்தூர் பிடாரியூர் வேங்கிபூர் பெருந்துறை திங்களூரும் பழங்கரையும் சாத்தனூர் வீரனூர் நிஞ்சப்பள்ளி வீரோடு பெரோடு சித்தாடு பகுனூர் புடகுறிச்சிதுலைதெலி வழப்பாடு காஞ்சிக்கோயில் பனையம்பள்ளி குளூர்மூக்கு சத்தியமங்கலம் சேரூர் அனைச்சனூர் முருகைதழு தென்டிக்கபழன் நம்பியும் கொங்கையப்பன் நம்பியும்...

## வடகரை நாடு...

பருப்பலி கல்லாரி கொழுமலை தொட்டிபட்டை மாதூர் அந்தியூர் சம்பை ஆப்பக்கூடல் மலையம்பாடி குப்பாண்டபாளையம் வேதறைய விஜய நம்பியும்.

## மேல் கரை பூந்துறை நாட்டு...

சென்னிமலை சென்னிப்பேட்டை அப்போதத்தி பட்டணம் ஆனந்த குலம் கஞ்சமலை காருவைமலை பேரூர் புத்தூர் பூலாம்பி தெலயை வரசப்பட்டி மக்ரூர் சாமமலை காட்டேட்டி ஈங்கூர் பழயம் முத்துறை அருக்கம்பட்டு காஞ்சாபுரம் திருமங்கலம் குராமங்கலம் கொரியமலை வெள்ளத்தூர் அலைப்பட்டி கொழுவர் ஆடையாம்பட்டி அலைபாறை கோட்டத்தூர் வையூர் திருவனி முத்தார். கினிநுள் நாதும் நம்பியும் சாரூண்டியப்பன் நம்பியும்

## பூவானி நாடு...

காவேரிபுரம் வெள்ளனூர் சொவாரதுகள் வேட்டனூர் திருப்பதி பள்ள பட்டி குளைப்பட்டி அமரதுனி சம்பள்ளி தங்கபள்ளி மலியனூரை சோழமண்டி புதப்பாடி சலைவண்டிக்கள் நம்பியும்...

## வெங்கல நாடு

கரூர் புன்னம் பேளைக்கத்திரம் அத்தூர் குடையூர் நாவலூர்குடையன் குரிச்சி கடதியப்பன் நம்பியும்

### மழை நாடு...

தென்கரை நாடு ஆரியூர்ப்பட்டி கோட்டூருமலைப்பாறையும் கூடலூர் ஆம்பிருந்தி ஒட்டத்தூர் ஒத்தப்பட்டி மழையம் பழையம் குன்று வலசை பாழையம் கிழருதபுரம் குமரேசர் ரக்ஷிக்கவும்...

### நுளம்ப நாடு ...

தகடூர்ப்பகுதி முழுமைத்தும்...

### பரித்திப்பள்ளி நாடு...

பரித்திப் பள்ளியில் பிள்ளையார் நந்தம் கூழம் கொண்டேருமலூர் கொண்டையார் மண்டபத்தம் பின்னுப்பள்ளி மரப்பேரை வழ்முனி வேடபுரத்தும் பிருகாரூர் வீரனுபுரம் செம்பலைமலை தேவி நதிய நேரி கூத்தாடி நத்தம் பழமேரூ கண்ட கலைமலைகள் பொன்னுமலை வாலீசர் கோவீசர் ரக்ஷிக்கவும்...

### வாழ வந்தி நாடு

வழவந்தி கூடக்கோவில் பில்லூர் கீரம்பூர் மரப்பள்ளி பாலப்பிறந்தகம் தாழையூர் கோதூர் முசுவனூர் குமரீசர் பாதம் ஆரியூர் தோளூர் சாதம்பூர் பின்னைத்தூர் கோனூர் வள்ளிபுரம் திண்டமங்கலம் நாமக்கல் நடந்தை மேல் சாதம்பூர் ஆரியூர் நல்லம் நாமக்கல் நரசிம்ம பெருமாள் ரக்ஷிக்கவும்...

### குறிச்சி நாடு...

அலையாமே ஜுசிபுரம் சிக்கைலநாதபுரம் வடுகம் புதுப்பட்டி மன்னுநச்சி சீருபள்ளி பட்டினம் மொடுமம் குறிச்சி காக்காவரி பாச்சல் பிழ்மாணூர் குருகைமலைபாழையம் அத்தனூர் கைலாச நாதர் ரக்ஷிக்கவும் அத்தனூரம்மன் ரக்ஷிக்கவும் – வேலூர் – புதூர் கணியாதி நமன் வஞ்ச நாட்ட மங்கலம் காதபள் வார் குறிச்சி அலவாயபுரம் நத்தம் குத்திமலை செந்தமங்கலம் மலையை மாணத்தியப்படைகம் முசிரி கல் வனி உடுப்பம் தலைப்பாடி ஆனியார் வேல்குறிச்சிமேல்மலை மொளுகொட்டமடி கோளு மலை மறதா ரக்ஷிக்கவும் பிள்ளையப்பர் ரக்ஷிக்கவும்...

### பெருங்கரை அரைய நாடு...

நெருமுரடி தலைவநல்லூர் வேலம்பூர் வழுந்திமே அதுசியூர் மொக்கு கோவில் கொத்தலம் பெரியுருந்து வாசநல்லூர் வள்ளிபுரம் குன்றை

துக்காச்சி மொஞ்சனூர் ஆச்சனூர் சிலம்பி வேலாயுத கடவுள் ரச்சிக்கவும் — விளையாசர் வெங்கரை பெரும் குறிச்சி திருவாலங்காடு கெரூர் வருவூர் சிறுபனி கோத்தமங்கலம் பண்ட மங்கலம் வடகரை ஆத்தூர் ஆண்டூர் மாவிரெட்டி பொத்தனூர் மூலிதாங்கு கொளாநிருக்கூர் கொத்தமங்கலம் சொலசிகாமணி வெலம்பிரி நாவிதன் கவுண்டி குறிச்சி பரமத்தி மாவிக்கல்தம் சொக்கிபி கலைமகரி அக்காரபுரம் பெருமாளியம்மன் வேலன் ரச்சிக்கவும்.

கிழங்கு நாடு...

வெட்டமங்கலம் வதுத்தொண்டமான மங்கலம் வங்கல் நன்னியூர் மூரி மங்கலம் புலியூர் கடம்பை சேமங்கிபாடி ஈசுவேளி கண்டியம்மன் ரச்சிக்கவும்...

தட்டய நாடு...

உப்பிடமங்கலம் வெள்ளியணை புலியூர் கட்டளை மூதலாசி புது கோட்டை சிந்தலவாடி திருமக்கூடல் ஆர்ப்பாத்தி கோயம்பள்ளி சமை நாயக்கன்பட்டி மூச்சிலியம்மன் ரச்சிக்கவும்...

வாரக்க நாடு...

குசவனி மங்கலம் நாராயணபுரம் பள்ளிபட்டி சௌந்தரேசுவரர் பொங்கலூர் கொலாவிரசர் ரச்சிக்கவும்...

அண்ட நாடு...

விருபாட்சி பொருந்தியாடி இடைய கோட்டை மண்டவாடி குஜிலி பட்டி நின்மதீசர் ரச்சிக்கவும்.

நல்லுருக்க நாட்டை சேர்ந்த ஆனைமலை நாடு...

கூடத்தூர் வெறுங்கல் குறுமலைப் பாவைச் சித்தூர் கண்டனூர் அமுதகவுர் ரச்சிக்கவும்.

காவடிக்க நாடு...

சிக்கல் நல்லூர் வந்துராணி தெலுங்குபாளைய பட்டணம் கரைப் பாடி ஆனியவர் திருமத்துரை பாலை பழனூர் அக்கறுார் அம்மன் ரச்சிக்கவும்...

பொங்கலூர் நாடு...

பொங்கலூர் புதூர் சலவனூர் வீரணம்பாடி காட்டூர் பாதப்பூர் தக்கம்பாடி பல்லா கோவில் கொசவன் சருகனூர் சேத்தப்பெலி யாஹூர் பெரியபட்டி கள்ளிபுளம் கோவில் புத்தூர் வெட்டுவத்தி சோமனூர் அப்பம்பள்ளன் குடியிருப்பூர் கூடத்தூர் 'அனுமந்த வேலாயுதவாமி ரக்ஷிக்கவும்...

ஆறைநாடு...

சேவூர் அன்னியூர் வெள்ளாள திருமுருகன் துறை குடியனூர் பெருர் அரூர் தெக்குளூர் கருவன் அவாசியனூர் நம்புயனூர் ஜெகப்பா பூண்டி தாவனூர் ராமியூர் பெருந்தூர் மீருமனூராநல்ல பழயம் தோட்டயத்தூர் கூடனூர் சிக்கன நல்லூர் குன்னத்தூர் வாழ வந்த கோட்டை

குறும்ப நாடு...

குறுமந்தூர் கவிங்கயம் பசிநூர் குளப்பலூர் சிங்னூர் கொச்சன் மிதனத்தூர் ஆதியூர் திங்களூர், செவியூர் வைத்த துணி விசய மங்கலம் விசயபுரி பவானி ரக்ஷிக்கவும்.

—காஞ்சி கோவை வங்கநாடு...

சத்தியமங்கலம் பெருந்தூர் தம்ப்பலி அனுமுனியொறு வெலி கூலனூர் தலைமலை கொப்பின் ரக்ஷிக்கவும்......காஞ்சி கோவில் நாடு சின்ன பிலியூர் கவுந்தப்பாடி சித்தேஸ்வரன் ரக்ஷிக்கவும்... வெட்டூர் விபூதம்—கொமுத்தூர் பெரூர் அரசம் பலம் காஞ்சித் தொட்டிபுத்தூர் சிக்கன நல்லூர் சங்கனூர் கடவளியூர் கோவி கம்பன் ரக்ஷிக்கவும்.

இது ஆறு நாட்டுக்கு சேர்த்து — வாச்சி நாட்டை சேர்த்த குளித்தலை பிடம் பளிகட கவியூர் குளூர் ஒட்டகர் மண்டபம் பொன்னகாவிநாயர்சேரி—பூவலாட — கன்றுடைபுத்தூர் பூருபாடி மாமேதை சிறமரக்கனூர் பழூர் மலேசிது பொங்கலூர் நாட்டுக்குட் சேர்த்து—கொரூர் நடையாருதக்சமுத்திரம் தட்டரம் குட்டை வேங்கி கவுண்டன் பாழயம் நச நாயக்கன் பட்டி கட்டாம் பாழயம் ஆத்தூரும் பாழயம் காவேரிபன் பட்டிக்கும் திருவாண்டிபட்டி பொக்கினைபட்டி குட்டி வேலக்கை பட்டி குளசபாளையம் காவேரி நதி திருச்செங்கோடு கொமுத மங்கலம் கத்தூபாளையம் சித்திரைத்தூர் புளியம்பட்டி மண்டல பாளையம் தேக் கரைபட்டி கொரைட் காவிநுந்துறை நாட்டுக் அந்த நகரைச் ரக்ஷிக் கவும்—குன்னூடம் குடியனூர் பிருட்டிம தல கொம்பு பிலிக்கான்பட்டி நல்லூர் வழிக நாத வாமி ரக்ஷிக்கவும்.

புல்வனிக்க நாட்டுக்குச்சேர்ந்தது கொண்டை காளிமுனையமுதலிய மச வயல்கூடன் சிலையெடு அருகு நிலம் பூரணமுடையட்டி சவாலை பட்டி வெலிச்சி விரயானவிடி கெம்ப நாயக்கன் பாளையம் கோவில் பாளையம் கடப்பட்டி தளைத்த வைமானியம்மன் ரக்கிக்கவும் – கன்னியூர் வடக்குதே காரம் வட வெழுதி வலிடி கோட்டை கரிப்புன் பட்டி பொள் குடி வெட்டமுகம் சிறுமுகை அல்லி துறை கொம்பதோட்டி மன்னிச் ரச்சிக்கவும் பெரியம்மன் ரச்சிக்கவும் – வெங்காரு கொச் சேரி அமரம் கெம்ப நேரி நாருபுரம் சமுத்திரம் சமுத்திரம் பக்க நாகுவிருப்பானி சித்தூர் ஆட்டூர் பொட்டதேறி காளிபட்டி மல்லிக சக் பத்தாளி ரச்சிக்கவும்.

வெங்காரு புல்வானி நாட்டுக்குச் சேர்ந்த கொண்டைகளி...

சித்தப்பட்டயம் – 24 நாட்டு செங்கம். புலவனிடத்தில் குப்பி வைத்திருப்பது அரியலும் சிறுக்கு யாதாலொருவன் விக்கிரைகம் பண்ணினால் நித்திய பண்ணினாலும் செங்கல கொரவியில் சித்து தனியிலும் சரும் தீர்த்தமாகிய இந்த வயானி புனிபதலத்தில் வெறுவாறும் பசுவை கொலை தோஷத்தி போகட்டுவதுக்கவும் சந்து மெவப் வேத நாயகியம்மன் ரச்சிக்கவும். –

24 நாட்டு உடையநாயகர் பேர் – தென்கரை நாட்டு வெட்டயன்னன் காங்கய நாட்டு அத்தனூரி பூந்துறை நாட்டு காளி யன்னன் வடகரை நாட்டு செங்கோடன் சேலம் பூந்துறை நாட்டு அரைச்சலூ புல்வானி நாட்டு பூசபாடி வெங்கல நாட்டு தம்மன்னன் மதநாட்டு நல்ல காழி தலய நாட்டு நல்ல தம்பி கெ கரை அரைய நாட்டு வேலப்பன் கிச்சு நாட்டு கண்டியன்னன் தட்டய நாட்டு குரியன்னன் வாரக்க நாட்டு காளியன்னன் அண்ட நாட்டு கன்னப்பன் ஆனைமலை நாட்டு குப்பன்ன காங்கேய நாட்டு வள்ளியன்ன பொங்கலூர் நாட்டு குன்னப்பன் ஆறு நாட்டு குப்பன் குறுப நாடு செம்பண்ணன் உருசி பொரு வங்க நாட்டு வாரணவாசி காசி பசித்தி பன்னி நாட்டு பெரியன்னன் வழுவுந்தி நாட்டு திருமலை குரியூரம் நாட்டு அத்தியன்னன் சேவ வெலப்பன் –குமிலியன் – புலி – குப்பன் – பொரு – முதலி – திரு – வேலப்பன் – குன்னி – குப்பன் – சாப – பெரியன்னன் – அல்லி – குரியக்கான்.

## வாழவந்தி நாடு நாட்டுப் பட்டயம்

இப்பட்டயம் நாமக்கல்லின் உள்ள வேட்டுவர் குடியில் வாழவந்தி நாட்டுப் பூசாரி அவர்களின் கோயில் வீட்டில் உள்ளது. இதைப்படித்து எழுதியவர் நாமக்கல் திரு. எஸ். இராசன் B. Com. அவர்கள்.

பட்டயம் செப்புத் தகட்டால் ஆனது 28·5 செமீ அகலம். 46·1 செமீ நீளம்.

தகட்டின் தெய்வப்படங்கள் செதுக்கப்பட்டுள்ளன. நடுவில் சிவலிங்கம், இடது பக்கம் பெருச்சாளி மீது விநாயகர், வலது பக்கம் மயில் மீது முருகன். பட்டயத்தின் இரண்டு பக்கமும் எழுத்து எழுதப்பட்டுள்ளது.

பட்டயம் இந்தச் செப்புத் தகட்டில் எழுதி சுமார் 250 ஆண்டுகளே இருக்கலாம் எனத் தோன்றுகிறது.

நாடு பிரித்து எழுதிய காலம் கலியுக ஆண்டு 4235 (கி.பி 1029) "ஆனந்த" ஆண்டு பொருந்தி வருகின்றது. கி.பி. 1029 ஆம் ஆண்டு வைகாசி மாதம் பதினைந்தாம் தேதி எழுதப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

கொங்கு 24 நாட்டு வேட்டுவரும் ஒரு நாள் பவானி கூடுதுறையில் சங்கமேஸ்வரர், வேதநாயகி அம்மன் சந்நதியில் கூடி இப்பட்டயத்தை எழுதி வைத்துக் கொள்கின்றனர். இப்பட்டயத்தில் 24 நாடும் அதில் சேர்ந்த ஊர்கள் சிலவற்றின் பட்டியலும், அந்த நாட்டின் புகழ்மிகு தெய்வங்களைப்பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன.

பட்டயத்தின் முன்னுரை வரலாற்றுக்கு உதவுவதாக இல்லை. 24 நாடுகளின் பெயர்களைக் கொங்கு மண்டல சதகத்து ஊர்த் தொகையுடன் ஒப்பிட்டு ஆராயலாம். கொங்கு மண்டல சதகத்தைப் பதிப்பித்த ஆசிரியர், ஊர்த்தொகையின் பழம்பாடல் கிடைக்காத பகுதிக்கு தானே பாடிச் சேர்த்ததாகக் குறிப்பிட்டுள்ளார். அதை விட எழுத்து மூலமான இப்பட்டயத்தைச் சற்றே உறுதியானதாக எண்ணலாம். இப்பட்டயத்தின் தலையாய தன்மை இது ஒன்று தான்.

பட்டயத்தின் இறுதியில் அன்று பவானித் தலத்தில் கூடிப் பட்டயம் எழுதிய வேட்டுவர்களின் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்தப் பட்டயம் வாழவந்தி நாட்டுச் செல்லப் புலவன் என்பவரிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டுள்ளது.

செம்பப் புலவன் மிகப்பெரிய புலவன். தர்க்கத்தில் வல்ல வன். மதிமானா போட்டி வித்தைக்காரர்களை வென்றவன். அவனுடைய தாயின் பெயர் வயிரவள். அவனுடைய சாதியினருக்காக அக்கால மன்னர்கள் மானியம் வழங்கியுள்ளனர். வேட்டுவர்கள் குடியைச் சேர்ந்தவன்.

அவனுடைய பெருமையை எடுத்துச் சொல்வது "செம்பப் புலவன் பட்டயம்" என்பதாகும். 31 செமீ அகலமும் 51 செமீ நீளமும் கொண்ட ஒரே செப்புத் தகடு இரண்டு பக்கமும் எழுதப் பட்டுள்ளது. தலைப்பில் மதுரை வீரசாமி படமும் இரண்டு அம்மன் படங்களும் எழுதப்பட்டுள்ளன. அப்பட்டயம் பின்னர் வெளியிடப் படும்.

## வேண்டுகோள்

கொங்கு 24 நாட்டைச் சேர்ந்த ஊர்களின் பெயர்கள் பட்டயத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அவை தம் மூல உருவம் மாறித் திரிந்துள்ளது. அந்தந்தப் பகுதியில் வாழ்கின்ற வாசகர்கள் திரிந்த பெயர்களின் சரியான பெயர்களை எழுதி அனுப்பினால் அவை ஆராய்ச்சிக்கு உதவும். அவற்றை 'கொங்கு' இதழில் வெளியிடலாம்.

நல்வாழ்த்துக்கள்!

★

**திரு. S. S. சௌந்தரராஜன்**

P.W.D. ஒப்பந்தக்காரர்

34, வெங்கடாசலம் பிள்ளை தெரு,

திருவல்லிக்கேணி,

சென்னை-600005.

நல்வாழ்த்துக்கள் !

தொலைபேசி : 38094

**D. சிவானந்தம்**

பொ. ப. து. ஒப்பந்தக்காரர்

18/19, சாம்பையர் தெரு.
சென்னை-600001.

---

நல்வாழ்த்துக்கள் !

**டி. கோவிந்தசாமி நாயக்கர்**

பொ. ப. து. ஒப்பந்தக்காரர்.

134, B/1, V. M. தெரு
இராயப்பேட்டை,
சென்னை-600014.

நல்வாழ்த்துக்கள்!

# திரு. R. பக்கிரிசாமி

சிவில் & சானிட்டரி எஞ்சினீரிங்

P.W.D. ஒப்பந்தக்காரர்

★

1, அன்னை காசம்பாள் தெரு,

ராஜா அண்ணாமலைபுரம்,

சென்னை-600028.